
மந்திர மண்ணில்
மாடஸ்டி!
10 வது ஆண்டு மலர்!
லயன்
காமிக்ஸ்
ரூ. 5/=


ஃபாரஸ்ட் ஆபீஸர்
பீட்டர் பாலண்டைன்
தோன்றும்
நடுக்கடல் நரகம்!
ரூ. 3.50
லயன் காமிக்ஸ்
ஆகஸ்ட் வெளியீடுகள்!
ஜெஸ்ஸி ஜேம்ஸ்!
லயன் காமெடி ஸ்பெஷல்!
Robin Hood
லக்கி லூக் சாகஸம்!
முழு வண்ணத்தில் முழுநீளக் கார்ட்டூன்!
ரூ. 6/=



# ஹாட்-லைன் ஸ்பெஷல்!



வாசக நண்பர்களே,

நமது பரிச்சயத்திற்கு பத்து வயதாகிறது!

ஆமாம் - லயன் காமிக்ஸ் மூலமாக நாம் சந்திக்கத் துவங்கி இன்றோடு வருஷம் பத்தாகி விட்டது என்றால் நம்ப முடிகிறதா - என்ன? 1984ல் ஜனித்த நமது சிங்கக்குட்டி இன்று பல்வேறு சோதனைகளை / சாதனை களைக் கடந்து வந்து கம்பீரமாக நிற்கின்றது!

பத்து நொடிகளைப் போல் பறந்துவிட்ட இந்தப் பத்து ஆண்டுகளில் தான் எத்தனை எத்தனை விதமான அனுபவங்க்ள்! ஆரம்பத்தில் விற்பனை அமைப்பினை உருவாக்கிட பட்ட சிரமங்கள் - வாசகர்களாகிய உங்களின் அங்கீகாரம் கிடைத்திடும் வரை உண்டான நடுக்கம் - அயல்நாட்டுப் படைப் பாளர்களிடம் கதைகளைப் பெற்றிடுவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் - என்று பழசெல்லாம் மனதில் நிழலாடுகிறது!

On the flip side - முதன் முதலில் இதழை தயாரித்துவிட்டு அதை ரசித்தபோது ஏற்பட்ட திருப்தி; தரமான கதைகளைத் தேடி பல்வேறு நாடு களுக்குத் திரிந்த த்ரில்; முதன் முதலில் பத்து ரூபாய்க்கு ஒரு தீபாவளி மலரும் - இப்போது இருபது ரூபாய்க்கு 100வது இதழையும் ஒரு அசட்டு தைரியத்தில் தயாரித்துவிட்டு, அவை மிகப் பெரிய வெற்றியடைவதை உணர்ந்தபோது உண்டான உற்சாகம்; எல்லாவற்றிற்கும் மேலாக நேரிலும், கடிதம் மூலமும் நிஜமான ஈடுபாட்டோடு விமர்சிக்கும் வாசகர்கள்ாகிய உங்களின் அன்பு என்று ஏராளமான விஷயங்கள் நினைவை விட்டு நீங்காமல் நிற்கின்றன!

நமது பத்தாண்டு காலப் பயணத்தில் கைகோர்த்து வரும் வாசக - விற் பனையாள நண்பர்களுக்கு எங்களது நிஜமான நன்றிகள் என்றும் உண்டு!

'Landmarks are set to be broken' (சாதனைகள் முறியடிப்பதற்கே) என்ற தீவிரத்தோடு நமது பயணம் தொடர்கிறது - ஆண்டவன் அருளும், உங்கள் நட்பும் இன்று போலவே தொடர்ந்திடும் என்ற நம்பிக்கையோடு!



அன்புடன்,

# லயன் லைன்

லயன் ரசிகர்களே,

**"செஞ்சுவரி ஸ்பெஷல்"** அலை இன்னமும் ஓயவில்லை என்பதை
தினமும் குவிந்து கொண்டிருக்கும் உங்கள் கடிதங்கள் உணர்த்துகின்றன! கதை
களைப் பற்றிய விமர்சனங்கள்; போட்டிகளுக்கான விடைகள்; பதில்கள் என்று
எக்கச்சக்கமான கார்டுகள் வந்து கொண்டேயிருக்கின்றன. இப்போதெல்லாம்
நிறைய வாசகர்கள் தங்கள் எண்ணங்களை மிக விரிவாக விளக்கி எழுதி வருகின்ற
னர்! முடிந்தளவிற்கு நானும் பதில் எழுதத்தான் செய்கிறேன் என்றாலும், கடிதங்கள்
வரும் Speed க்கு ஈடு கொடுக்க முடியவில்லை! 'பதில் வரவில்லையே' என்று
வருத்தப்பட வேண்டாமே - ப்ளீஸ்! நிச்சயம் உங்களின் எண்ணங்களுக்கு,
யோசனைகளுக்கு மதிப்பளிக்கப்படும்! விரைவில் தேங்கியுள்ள கடிதங்களுக்கும்
பதில் அனுப்பப்படும்!

இம்மாத மாடஸ்டி சாகஸம் பிரம்மாண்டமானதொரு ஆக்ஷன் திரைப்படத்
திற்கு ஏற்ற கதையமைப்புடன் வந்துள்ளது! மிகவும் வித்தியாசமான ரோலில்
கார்வின் செய்யும் ரகளைகள் நிச்சயம் உங்களை ரசிக்கச் செய்யும்!

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் சிரமமானதொரு க்ரைம் க்விஸ் போட்டிக்கு
உங்களில் ஏராளமானோர் சரியான விடை எழுதியிருந்தபோது ''லயன் வாசகர்கள்
என்றால் சும்மாவா?' என்று பெருமைப்பட்டு எழுதியிருந்தேன்! என் சட்டை
காலரை இன்னும் கொஞ்சம் தூக்கி விட்டுக் கொள்ள இப்போது இன்னொரு
வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆமாம் - எக்கச்சக்கமான வாசகர்கள் அனுப்பி வரும் சித்திர சிறுகதைகள்;
துணுக்குகள்; போட்டிகள் போன்றவற்றைப் பார்க்கும் போது நிஜமாகவே பெரு
மையாக உள்ளது! பக்கம்.... 81... ல் ஆரம்பித்துள்ள பெயரிடப்படாததொரு புதிய
பகுதியில் உங்கள் கைவண்ணத்தில் உருவான முத்துக்கள் இடம்பெற்றுள்ளன!
தொடர்ந்து உங்கள் 'கைவரிசையைக்' காட்டுங்கள்!

அப்புறம் - போன இதழில் இரத்தப் படலம் தொடரவிருப்பது பற்றியும் லக்கி
லூக்கின் காமெடி ஸ்பெஷல் பற்றியும் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து பயங்கர
மான applause! அடுத்த மாதம் புதிய ஹீரோ பீட்டர் பாலண்டைன் தோன்றும்
நடுக்கடல் நரகம் ரூ. 4/- விலையில் வருகிறது! அத்தோடு காமெடி ஸ்பெஷலாக
''ஜெஸ்ஸி ஜேம்ஸ்'' முழு வண்ணத்தில், ரூ. 6/- விலையில் வருகிறது! படிக்கத்
தவறாதீர்கள்!

**தீபாவளி மலர்** அக்டோபர் மாதம் வரவிருக்கிறது! இந்தத் தடவை வித்தியாச
மான சைஸ்; கதையமைப்பு; என்று plan பண்ணியுள்ளேன்! உள் அட்டையில்
விபரங்கள்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!
அதுவரை - happy reading!

அன்புடன்,

# "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | பாரதிநந்தீஸ்வரன் வயது : 29 |
| முகவரி | : | (78E5) திருவள்ளுவர் நகர், குமார பாளையம், சேலம் (Dt) PIN 638 183 |
| கல்வித் தகுதி | : | 10ம் வகுப்பு |
| பொழுது போக்குகள் | : | ஆங்கிலப் படங்கள், ஸ்பீல்பர்க் போல் டைரக்டர் ஆக கனவு காண்பது. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | கத்திமுனையிலிருந்து |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : | முத்துக் காமிக்ஸ் பிரியன் நான் அப்படியே லயனுக்கும் தாவி விட்டேன். |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | : | ஆனந்த விகடன், பாக்யா, குமுதம், ஜூனியர் போஸ்ட், ஜூனியர் விகடன் |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | : | மாடஸ்டியின் கதை, மாடஸ்டியின் மீது இனம் புரியாத Love வே உண்டு. என் பெண் குழந்தைக்கு 'பிளைசி' என்றுதான் பெயரிடுவேன். |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | தங்கை நாயகி, Friend மூர்த்தி 'காஞ்சனா தேவி' மூவர் மட்டும்! |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | பத்திரமாய் பெட்டியில் வைத்து பூட்டுவேன், எல்லா காமிக்ஸும் என்னிடம் பத்திரமாக உள்ளது! |


மந்திர மண்ணில் மாடஸ்டி!
பெய்ருட்டின் வட பகுதியிலிருந்த பிரபல சூதாட்ட அரங்கு அது!
வில்லி... காப்பாத்துங்க...
கொஞ்சம் இருங்க.. வர்றேன்


இளவரசி.. என்ன ஆசசு?
நான் உடனடியா எங்கேயாச்சும் பதுங்கிக் கிடணும்... ஷேக் மறுபடியும் என்னைத் தேடி ஆளை அனுப்பியிருக்கார்... இன்னொரு ரவுண்டு பேக் கம்மான் ஆட ஆசைப்படறார் போலிருக்கு!
மறுபடியுமா? செம்மியில் பத்தாயிரம்; அப்புறம் பேக் கம்மானில் ரெண்டாயிரம் உன்கிட்டே தோற்றப் புறமும் மனுஷனுக்குப் புத்தி வரலியா?
வரலியே..! அவருக்கு ஆடவே தெரியலை..! ஆனாலும் என்ன சபலமோ... என்னை விடாம துரத்துகிறார்!
ஷேக்கோட மந்திரியை மடக்கி நிறுத்துங்க.. நான் நைஸா நழுவி ஓடிப் போயிடறேன்..
ஓ.கே.. ஆனா இப்போ அந்த ஆளு எங்கே இருக் காரோ - தெரியலியே!
ஹலோ.. மிஸ் மாடஸ்டி! உங்களை எங்கெல்லாம் தேடுறது! எங்க மாஸ்டர் ஷேக் காதிம் - அல் - மாஸ்பாவின் வேண்டு கோள் என்னவென்றால் -


ஸாரி.. ஜாஸிம்! மறுபடியும் பேக் கம்மான் ஆட நான் பிரியப்படலைன்னு போய் சொல்லு.. அவர்கிட்டே!
நீங்க இப்படி பிடிவாதம் பிடிக்கக்கூடாது மேடம்.... நீங்க வரலைன்னா மாஸ்டர் என்னை கொன்னுடுவார்!
பணத்தை இழக்கிறதுன்னு அவர் தீர்மானமா இருந்தா வேறு யாரை யாவது கூப்பிட்டு ஆடலாமே... என்னையே ஏன் தொந்தரவு பண்ணணும்?
உங்களோடன்னா ஆட்டம் படு ஜாலியா இருக்குதாம்... அதான் -
ஏய்ய்... வில்லி - என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு?
வர்றேன்.. ஆனா ஒரு கண்டிஷன்... பந்தயமா பணத்துக்கு பதிலா தீக்குச்சிதான் வச்சுக்கணும்!
எப்படியோ... நீங்க என்னோட வந்தா.. சரி!
அதையடுத்து - ஷேக் தங்கியிருந்த ஆடம்பர மாளிகையில்...
தாயக்கட்டை இப்படி பழி வாங்குதே என்னை!
உங்களுக்கு ஆடத் தெரியலை... அதை விட்டுட்டு -



ஆனாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை விஷயங்களில் நிபுணத்துவம் இருக்கிறது ஆச்சரியமான சங்கதிதான்!
மறுபடியும் தோத்துப் போயிட்டேன்...! பரவாயில்லை... இன்னொரு வாட்டி ஆடலாம்!
எப்படியாவது ஒரு தடவையாச்சும் நான் ஜெயிச்சுடணும்!
வசகு ஆட இப்போ உங்க கிட்டே ஏது தீக்குச்சிகள்? நான் கடன் தர்றதா இல்லை!
சொல்லுடா நாயே... ஏன் நம்ம கிட்டே தீக்குச்சிகள் இல்லாம போயிட்டது?
வ..வந்து இருந்த அத்தனை குச்சிகளையும் நீங்க ஆட்டத்திலே தோத்துட்டீங்க மாஸ்டர்...



மிஸ் மாடஸ்டி... என்னோட ராஜாங்கத்துக்கு நீ அவசியம் வரணும்! அங்கே தீக்குச்சி தயாரிக்கிற பாக்டரி ஒண்ணை உடனடியா கட்டப் போறேன். அப்புறமா நாம தடங்கல் இல்லாம ஜாலியா எப்பவும் பேக்கம்மான் ஆடிட்டே இருக்கலாம்!
ஸாரி.. மன்னிக்கணும்!
நோ.. நோ.. நீ இப்படி சொல்லிட்டா எப்படி? நான் மற்ற ஷேக் மாதிரி இல்லையம்மா.. ரொம்ப நல்லவன். அந்தப்புரத்தைக் கூட கலைச்சு
அங்கே இருந்த பொண்ணுங்களை எல்லாம் சீர் திருத்தப் பள்ளிக்கு அனுப்பிச்சிட்டேன்னு பாரேன்!
அப்போது -
மிஸ்டர் வில்லி... சில இளம் பெண்களோட வந்திருக்கார்.. மிஸ் மாடஸ்டியோடு பேசணுமாம்!
வரச் சொல்!
பெண்களா..?
குறுக்கே புகுவதற்கு மன்னிக்கணும்... சில பொண்ணுகள் கிட்டே மாட்டிக்கிட்டிருக்கேன்!
உங்களுக்கு ஒண்ணும் புதுசு இல்லியே... வில்லி!


பிரபு.. மிஸ்டர் வில்லி யின் மகளிர் குழாமை அறிமுகப் படுத்துகிறேன்!
'டாலி ரூக்கர் டான்ஸர்ஸ்' குழுவை சேர்ந்த வங்க நாங்க... என் பெயர் பெஸ்ஸி..
எங்க மானேஜர் ஒரு உதவாக்கரை... எங்கேயோ ஓடிப்போயிட்டார்.. மாட்டிக் கிட்டு முழிக்கிறோம்... மிஸ்டர் கார்வின்தான் நீங்கள் எங்களுக்கு ஒத்தாசை பண்ணுவீங் கன்னு சொல்லி கூட்டிட்டு வந்தார்!
நானா?
நானே ஒத்தாசை பண்ணலாம்தான்... ஆனா அவங்க என்மேலே நம் பிக்கை வைக்கணுமே?
அடிச்சுக்காதீங்க.. என்னோட சின்ன மூளையிலே இந்தப் பிரச்சனைக்கு ஒரு பிரமாதமான யோசனை தோணுது!


எங்க நாட்டிலே இந்த மாதிரி நாட்டியக் குழுவினர் யாரும் கிடையாது... எதையும் புதுமையா செய்யணும் எனக்கு.
இவங்களை கூட்டிட்டுப் போய் அங்கே ஒரு மாதம் தொடர்ந்து புரோகிராம் நடத்த தீர்மானிச் சிருக்கேன்..
ஆளுக்கு ஆயிரம் டாலர் சன்மானமா கெடைக்கும்!
முடிவிலே ஊர் திரும்ப இலவச பயணம் ஏற்பாடு பண்றேன் - படுஜோரான ஏற்பாடுதான்... இல்லே!
நாங்க கூடிப்பேசிட்டு அப்புறமா எங்க முடிவை சொல்றோம்!
அதையடுத்து -
சம்மதிக் கிறோம். ஆனால் ஒரு விஷயம் -
பொதுவா ஷேக்குகள் எப்படிப்பட்டவங் கன்னு எல்லோருக்குமே நல்லா தெரியும். அதனுலே அங்கே எங்களுக்கு, எங்களுடைய பெண்மைக்கு கேடு வந்திடுமோன்னு ஒரு பயம்


..அதனாலே - மிஸ்டர் கார்வின் எங்களுக்கு கார்டியனா கூட வர்றதா னால் நாங்க வர்றோம்!
ஏய்.. இதென்ன புது வம்பு!
நான்... நான் எப்படி இது களுக்கு கார்டியனா இருக்க முடியும்? என் சுபாவத்துக்கு கொஞ்சமும் ஒத்து வராத சங்கதியாச்சே!
புரியுது... வில்லி! நானும் உங்களோட வர்றேன் - எல்லாம் சரியாக இருக்கும்!
பிரமாதம்... நல்ல ஏற்பாடு! அருமை!
முதலில் - இன்றிரவு இங்கே தங்க இந்த பெண் களுக்கு தனியறைகள் ஏற்பாடு செய்வோம்!
நாளை மதியம் புறப்பட என்னோட விமானத்தை ரெடி பண்ணும் பொறுப்பு உன்னைச் சேர்ந்தது ஜாஸிம்!
சரி... மாஸ்டர்!
பின்னர் மாடஸ்டியின் அறையில் -
லிபரைனில் அரசியல் குழப்பம் ஏதும் இல்லையே?
குறிப்பிடும்படியாக எதுவுமில்லை.. ஆனா, ஷேக்கோட தம்பி கொஞ்சம் விஷமத்தனம் பண்றதாக கேள்வி!


ஆமா ஷேக்குக்கு நூறு பேர் கொண்ட தனியார் இராணுவம் ஒன்று கர்னல் ஜார்ஜ் தலைமையிலே பக்க பலமா இருக்கு!
அப்போ.. இந்தப் பெண் களோட பாதுகாப்பு பற்றி பயப்படத் தேவையில்லைன்னு தோணுது!
1200 மைல்களுக்கு அப்பால் ஸிபரைனில் -
உங்க அண்ணன் சில விருந்தாளிகளோட நாளை கிளம்பி வர்றா ராம்... விமானத்தை வெடி வச்சு தகர்க்க ஏற்பாடு பண்ணியிருக்கேன்!
நல்ல படியா முடியட்டும்... உனக்கு தாராளமா வாரி வழங்கு கிறேன்!
ஷேக் தன் பரிவாரங் களோடும், விருந்தாளி களோடும் விமானதளம் நோக்கி பயணமானார்.
பூமிக்கு அடியிலே எண்ணெய் வளம் இருக்கே தவிர மேலே ஒரு பாலைவன பிரதேசம்!
ஆமா.. நாம தங்கப் போறது ஷேக்கோட ஏர்-கண்டிஷன் வசதி யுள்ள ஆடம்பர புது அரண்மனையில்!
ஜாஸிம்... சாலையை பார்த்து ஓட்டு!
இந்தா வெடி குண்டு... எப்படியாவது விமானத்திலே மறைவா வச்சிடு!
36


ஹேெ... மிஸ் மாடஸ்டி.. நீங்க இப்படி வந்து மாஸடர் பக்கத்திலே உட்கார்ந்து கொள்ளுங்க..
முக்கியமான விஷயங்கள் பற்றி உரையாட வசதியாக இருக்கும்.
நீ போய் வில்லி கிட்டே உட்கார்!
நல்ல யோசனை!
ஷேக்கின் விமானம் தென் கிழக்கு திசையில் பயணம் மேற்கொண்டது..
ஷேக் எப்படிப்பட்டவர்.. ஜாஸிம்? அந்தப்புரம் எல்லாம் வச்சிருக்காரா?
வச்சிருந்தார்.. ஆனா இப்போ இல்லை!
உல்லாசங்களில் எல்லாம் இப்போ அவருக்கு நாட்டம் இல்லை. மாறாக நிறைய பழைய மாடல் கார்களை சேகரிக்கிற திலே ஆர்வமா இருக்கார்!
மிஸ்டர் ஜாஸிம்.. நீங்க எப்படியாம்



ஏண்டி அவர் வாயை கிண்டறே..?
என்னை பார்த்தா அப்படிப்பட்ட ஆளா தெரியுதா என்ன..? இப்போ உங்களுக்கு ஒண்ணு காட்டப் போறேன்!
என்னைக் கவர்ந்த லேடி இதோ இந்தப் பொண்ணு தான் - பெயர் கரீமா..!
ஆறு ரொம்ப சின்னப் பொண்ணு மாதிரி இருக்கு!
ஆறு வயசு..! என்னோடு மாஸ்டரின் கடைசி குழந்தை. கரீமாதான் அவரோட கண்ணின் மணி! - எனக்கும்தான்!
வம்புக்கு இழுத்து கிண்டல் பண்ணலாம்னு பார்த்தா ஆசாமி சொதப் பிட்டாரே.. சே!
ஸிபரைனை விமானம் நெருங்கிக் கொண்டிருந்தது.
நான் ஜெயிச்சுட்டேன்! ஜெயிச்சுட்டேன்!!
பாராட்டுக்கள்!


எனக்கு நீ இரு
நூறு தீக்குச்சி
கள் தானும்
பிலை மாட்டேடி
- வசதி
வந்திட்டது
எனக்கு!
புறப்படும்போது வேக்
கோட் ஆள் யாரோ வந்து
கொடுத்திட்டுப்
போனான், பாட்டு
கேட்கலாம்னு பார்த்தா
மக்கர் பண்ணுது...
உதவி பண்ணுங்க வில்லி!
இது..
எங்களோடது
இல்லியே!
ரேடியோ மெக்
கானிஸம்
தெரியுமோ
உங்களுக்கு,
வில்லி?
இதெல்லாம்..
ரொம்ப
சாதாரணம்
எனக்கு...
ஆவ்.. நுன்டு! இளவரசி -
எல்லோரையும்
வீட்டுக்குப் பின்னால்
படுத்துக்
கொள்ளச் சொல்!
படுத்துக் கொள்ளுங்கள் -
சீக்கிரம்!
என்ன ஆக்க?



நான் என்ன கோழையா.. இப்படி பதுங் கிக் கொள்ள? - மாட்டேன்
அவரை அமுக்கிப் பிடிங்க.. விடாதீங்க!
ப்யூஸை அகற்ற முடியுமா வில்லி!
டைம்பாம் அல்ல இது - ரேடியோ அலை மூலம் இயக்கப்படக் கூடியது...
எந்த விநாடியிலும் வெடித்து விடலாம். நான் கதவை திறக்கிறேன்.. சட்டென்று வீசி எறிய தயாராக இரு இளவரசி!
ஸிபரைன் விமான தளத்தில் -
அரசு விமானம் வட திசையில் இருபது மைல் தொலைவில் வந்து கொண்டிருக்கிறது கர்னல்...
வந்து தரை இறங்க அனுமதி கொடு..
விமானம் நம் பிராந்தியத் தினுள் வந்த பிறகே குண்டை வெடிக்கச் செய்ய வேண்டும் கர்னல்.. விமான விபத்தை வேறு அண்டை நாடுகள் புலனாய்வு செய்யும் அசம்பாவிதத்தை தவிர்த்து விடவேண்டும்...!


கர்னல் ஜார்ஜ் இதுவரை எந்த தவறும் செய்த தில்லை..!
வில்லி கதவை இழுத்து திறந்ததும் -
விடுங்கள் என்னை...! ஆபத்து வேளையில் என் மேல் பெண்கள் விழுந்து கிடப்பதை என்னால் சகிச்சுக்க முடியாது!
ஆறு மைல்களுக்கு அப்பால் -
விசையை இயக்கு... சமவெளியில் விமானம் விழும். நேரில் சென்று மிச்சத்தை - அவசியப் பட்டால் - செய்து முடித்து விடலாம்.
மாடஸ்டி வெடி குண்டை வீசியெறிந்த மறுகணம் -
பூம்!
வால் பகுதியில் சேத மடைந்த விமானம் தட்டுத் தடுமாறி தலை குப்புற பாய்ந்தது...
இருக்கை பெல்ட்டுகளை கட்டிக் கொள் ளுங்கள்.



கைகளை தலைக்கு அணையாக வைத்து சேர்த்துக் கொள்ளுங்கள்.
சே.. இன்னும் கொஞ்சம் நாம் முந்திக் கிட்டிருக்கணும்!
வலுக்கட்டாயமாக தரையிறங்க வேண்டிய நெருக்கடி!
விமான தளத்தில் -
ஸார்... ஹாலா ரிட்ஜ் பார்டர் போஸ்டின் அறிக்கை - விமானம் சேதமடைந்திருந்தாலும் ஓரளவு கட்டுப்பாட்டில்தான் இருக்கிறதாம்!
அதெப்படி..? குண்டு வெடித்த போது அது சுக்கல் நூறாகியிருக்க வேண்டுமே?
சேதமடைந்த விமானத்தில்...
முடிந்த வரை மேலே ஏறி வாங்க...
சிதறிப் போன விசைகளை இயக்கி விமானத்தை கட்டுக்குள் வைக்க முயன்ற விமானியின் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது... சம நிலைக்கு வந்த போதிலும் விமானம் வேகமாக உயரம் இழந்து வந்தது..
என்னோட தம்பி ஜுஹிரின் விஷமம் இது..! அவனை கழுவில் ஏற்றாமல் நான் விடப் போவதில்லை!
அதை அப்புறமாக யோசிப்போம்!


விமானம் தரையை தொட்ட போது ஒரு சக்கரம் படீரென்று வெடித்தது...
க்ராக்!


விமான தளத்தில் -
அனைத்து ரோந்து களோடும் தொடர்பு கொண்டு விசாரி - விமானம் விழுந்த இடம் துல்லியமாக எனக்கு தெரிஞ்சாகணும்


ஒரு முறை மேலே எகிறி மீண்டும் கீழே வந்த விமானம்...
..இரண்டாக பிளந்து கொண்ட பின் ஓடிச் சென்று பாறைகளோடு உராய்ந்த பெரும் சப்தத்தை எழுப்பியது.


விமானம் ஒரு வழியாக ஓய்ந்து நிலை கொண்டது.


விமானத்தில் வால் பகுதியில்...
நாம் தப்பிப் பிழைத்தது தெய்வாதீனமான செயல்தான்!
பத்து நிமிடங்களுக்குப் பின் -
பாவம்... பைலட்! கடும் பிரயத்தனம் பண்ணி நம்மில் இத்தனை பேரின் உயிரை காப்பாற்றி விட்டவருக்கு தன் உயிரை காப்பாற்றிக் கொள்ள முடியாது போய் விட்டது.
சாவு - 4... காயம் - ஐந்து பேர். மற்றவர்களுக்கு லேசான சிறாய்ப்புகள் தான்!
காயமடைந்தவர்களுக்கு உடனடியாக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யணும்... பக்கத்திலே ஏதாவது கிராமம் இருக்கா.. ஜாஸிம் ?
அட.. அல்லா.. எங்க மாஸ்டர் படு மோசமா கிடக்காரே!
இது டெரால் சமவெளி பகுதி - மேற்கே அஞ்சு மைல் தொலைவிலே ஒரு கிராமம் இருக்கு!
வில்லி... நீங்களும் ஜாஸிம்மோடு போங்க.. தண்ணீரும், காயத்துக்கு கட்டுப்போட தேவை யான சாமான்களும் சேகரிச்சுக்கிட்டு வாங்க...
ஓ.கே.


கர்னல் ஜார்ஜ் வசம் ரோந்து வண்டிகள் உண்டு... உடனடியாக விமான தளத்தி லிருந்து நமக்கு உதவி வந்து சேரக் கூடும்!
நம்மை தேடி வந்து சேர அவர்களுக்கு அவகாசம் பிடிக்கலாம்... அதுவரை நாம் ஒய்ஞ்சு உட் கார்ந்திருக்க முடியுமா?
கிழக்கே சில மைல் தொல்வில்
ஸார்! மூன்றாம் எண் ரோந்துப் படையினரின் தகவல் - டெரால் சமவெளி நோக்கி விமானம் போனதாம்!
நேராக அங்கே விடு வண்டியை!
ஜாஸிமும், வில்லியும் உதவி தேடிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டனர்..
ஏறி வா.. சீக்கிரம்.. அந்தக் கிராமத்தை நாம தாமத மின்றி போய்ச் சேரணும்.
மிஸ்டர் வில்லி - கொஞ்சம் திரும்பி பாருங்க - அங்கே!
கர்னல் தன்னோட சிப்பாய்களோட வந்து சேர்ந்திட்டார்... உதவி தேடி நாம போக வேண்டிய அவசியம் இனி இல்லை.
கர்னல் ஜார்ஜ் துரோகியாகிவிட்டிருந்த விஷயம் எவருக்கும் தெரியாது!
இத்தனை பெண்கள்...? - அவர்கள் லாம் யார்னு தெரியலியே!


யார் நீ?
என் பெயர் மாடஸ்டி பிளைஸி! இவங்கள்லாம் நாட்டியக் குழுவைச் சேர்ந்தவங்க.. ஒரு மாதம் இங்கே புரோகிராம நடத்த ஷேக் அழைச்சுக் கிட்டு வந்திருக்கார்!
விமானத்திலே யாரோ குண்டு வச்சிட் டாங்க... நாலு பேர் செத்திட்டாங்க... ஷேக் உள்பட அஞ்சு பேருக்கு காயம் - உடனடி யாக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யணும்!
பண்றேன்!
பொண்ணுங்களை எல்லாம் விலகிப் போய் ஓரமா நிற்கச் சொல்!
ரொம்பவும் தான் அதிகாரம் பண்றான்!
ஷேக்கை தூக்கிச் சென்று ஒரு காரில் படுக்க வைத்தனர்.
கார்ப்பொரல்.. நீ இந்தப் பெண்களை காவல் காத்து நில்!
காவலா?


அதையடுத்து - கர்னல் உரத்து உத்தரவிட அதைத் தொடர்ந்து எழுந்த தோட்டா முழக்கம் நாலா திசைகளிலும் எதிரொலித்தது...
ரட்டட் டட் டட்!...
இது - கொடுமை!
ம்ம் - யாரும் நகரக் கூடாது!
விபத்தில் தப்பிப் பிழைத்தவர்கள் படு கொலை செய்யப்பட்ட காட்சியை கண்ணுற்ற நடனக் குழு பெண்கள் உறைந்து போயினர்...
சுட்டுத் தள்ளு கிறார்கள் அவர்களை.. பச்சைக் கொலை
அல்லா அருள் புரிவாராக.. கர்னல் ஜார்ஜ் ஜுஹிரோடு சேர்ந்து கொண்டு எங்க மாஸ்டருக்கு எதிராக சதியில் இறங்கி விட்டான் என்றாகிறது!
மலை மேட்டில் -
அனைவரையும் கொல்லச் சொல்லி ஜுஹிர் உத்தர விட்டார். ஆனல் நீங்களோ ஷேக்கையும், பெண்களையும் விட்டு விட்டீர்களே ஸார்!
ஜுஹிருக்கு பெண்கள் என் றால் ரொம்ப பிடிக்கும்!


ஷேக் ஆடிப் போயிருக்கிறார். அவர் உயிரோடிருப்பது அவசியம். ஹாலோ கோட்டைக்கு கொண்டு போய் அவரை சிறை வை. ஆனால் ஷேக் செத்து விட்டதாக ஜுஹிரிடம் சொல்லப் போறேன்.
புரியலையே ஸார்.
நம்முடைய இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி இது சார்ஜண்ட்! ஜுஹிர் பேச்சுப்படி தொகையை தர மறுத்தால் ஷேக்கை மீண்டும் உயிரோடு கொண்டு வந்து விடுவேன் என்று மிரட்டி பணிய வைத்து விடலாம்!
ஓ...!
மிஸ்டர் வில்லி.. அவசரப் படாதீர்கள்.. உங்கள் வசம் ஆயுதம் ஏதுமில்லை.. என்ன சாதிக்க முடியும்?
கர்னலின் ஆட்கள் நம்மைப் பார்த்து விட்டால் யோசிக்காமல் அக்கணமே கொன்று போட்டுடு வாங்க..
உண்மைதான்.. இளவரசியையோ மற்ற பெண்களையோ அவர்கள் தொடவில்லை. அவர்களுக்கு உதவி வேண்டுமென்றால் நாம் உயிரோடிருக்க வேண்டியது அவசியம்!



பிணங்களை தூக்கி விமானத்தின் வால் பகுதியில் குவித்து தீ மூட்டியது அந்த கொடியவர் கும்பல்.
விளங்காத ஏதோ கார ணத்தினால் தீப்பிடிச்சுக் கிட்டது அரசு விமானம்.. விமானத்திலிருந்த யாரும் உயிர் தப்ப வில்லை - இதுதான் நாம் வெளியிடப் போகும் அறிக்கையின் சாராம்சம்.
அடேய் கிராதகா. நீ நல்லா இருப்பியா...? நாசமா போயிடுவே உன்னை
இப்போ வேண்டாம்.. பொறுமையாயிரு பெஸ்ஸி!
எங்களை என்ன செய்வதாக உத்தேசம்?
ஷேக் காதிம் அந்தப் புரத்தை கலைச்சுட்டார்... ஆனால் அவரோட தம் பிக்கு ரசனை ஏராளம்.. உங்களை வச்சு தன்னோட அந்தப்புரத்தை புனர் நிர்மாணம் செய்து விடுவார்.
என்ன... அவருக்கு ஆசை நாயகிகளாகப் போகிறோமா நாம்?
பதறாதே! வில்லி கார்வின் சுதந்திரமாக இருக்கிறார். அவர் உயிரோடிருப்பது கூட எதிரிகளுக்குத் தெரி யாது... எனவே, மறந்து போய்க்கூட நாம் அவர் பெயரை உச்சரித்து விடக்கூடாது!
ஆனல் அவரால் அப்படி என்ன சாதிச் சுட முடியும்?
அவரைப் பத்தி உனக்குத் தெரியாது -பொறுத் திருந்து பார் புரியும்



இளவரசி சைகை செய் கிறாள் - பதுங்கிக் கிடந்திருந்து இருட்டிய பிறகு அவளோடு தொடர்பு கொள்ளச் சொல்கிறாள்.
ஆச்சரியமா இருக்கே!
வசந்த மாளிகை -
பெண்களை மிச்சம் வச்சு கொண்டு வந்துசேர்த்த உம்மை எவ்வளவு பாராட்டினாலும் தகும் மிஸ்டர் ஜார்ஜ்.
நன்றி.. பிரபு - அதிகார பூர்வ அறிக்கையின்படி இவர்களும் விமான விபத் தில் ஒட்டு மொத்தமாக மாண்டு போனவர்கள்!
உன்னோட ரேடியோ அறிக்கை வந்தவுடனேயே அந்தப்புரத்தை ரெடி பண்ணிட்டேன்... இவர்களை அங்கே அழைச்சிட்டுப்போ.
அந்தப்புர பகுதியில் -
கொண்டு வரப்பட்ட பெண்களை அரேபிய பணிப் பெண்கள் நீராட்டி ஆடை புனைந்து அலங்காரம் செய்வித்தார்கள்.



அதே சமயம் நகருக்குள் -
இப்போதைய ஷேக் காதிம் சின்னப் பிள்ளையா இருந்தப்போ ஏறத்தாழ இருபது வருஷ காலம் நான் அவருக்கு மெய்க்காப்பாள ஞ இருந்திருக்கேன்.
அப்போ நான் நல்ல பல சாலி... திறமையா சண்டை போடுவேன்.
..ஆனா இப்போ - வயசா யிட்டுது... உடல் தளர்ந்து... பார்வை மங்கி... ஹும் - வாளை தூக்கக்கூட கையில் சக்தி இல்லை.
சண்டை போடற வேலையை எல்லாம் மிஸ்டர் வில்லி பார்த்துக்குவார்... நீ அவருக்கு வேற சில ஒத்தாசை பண்ணினா போதும்.
இவருக்கு இப்போ மாறு வேடம் போட்டுக்கணும்...
.. காதிம் இளைஞனா இருந்தப்போ நான் குதிரையேற்றம், வாள் பயிற்சி எல்லாம் சொல்லிக் கொடுத்தப்போ அவர் போட்டுக் கிட்டிருந்த உடுப்புகள்தாம் இவை...
அந்தப்புரத்திலிருந்த அனைத்து பெண்களும் ஜூஹிரின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்..
ஜோர்...! இப்போ இவங்கள்லாம் முழுமையா எனக்குச் சொந்தம்னு இவங் களுக்கு தெரியுமில்லே? முரண்டு பண்ணினா சவுக்கடியோ அதை விட மோசமான தண்டனையோக கிடைக்கும்னு சொல்லி வை!
ஏற்கனவே எச்சரித்து விட்டேன்.. பிரபு!


சரி.. இவர்களை அழைத்துப் போ!
வந்து.. நீங்க...
இப்போ வேண்டாம்... அவசர ராஜாங்க வேலை காத்திருக்குது!
அரசுப் பொறுப்பை நான் எடுத்துக் கொண்ட விஷயத்தை முதலில் ஜனங்களுக்கு பிரகடனப் படுத்தியாகணும்..
இருள் கவிழும் வேளை... அரண்மனையிலிருந்து இரண்டு மைல் தொலைவில் -
அந்த இடத்தை பற்றிய விபரங்களை சொல் ஜாஸிம்..
அரண்மனை மலையடி வாரத்தில் இருக்கிறது... தோட்டத்தை கடந்ததும் பாறை குடைவில் பெரிய மண்டபம் இருக்கு.
அதில் ஒரு பாதி அந்தப்புரம்... மறுபாதியில் மாஸ்டர் சேகரித்த பழங்கால கார்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கு.
ஜுஹிர் எங்கே அடைச்சு வச்சிருப்பான்?
பிடிச்சுட்டு போன பொண்ணுகளை
தெரியலை...! அந்தப்புரம் காலியாத்தான் இருக்கு... அதனாலே அங்கேதான் வச்சிருக்கக் கூடும்!


நான் தொடர்பு கொள்ளும் வரை இளவரசி எந்த அதிரடி நடவடிக்கையிலும் இறங்க மாட்டான். ஜுஹிர் இன்றிரவு ஒரு துணையை தெரிந்தெடுக்க நினைத்தால் நிச்சயம் அது அவளாகத்தான் இருக்கும். எனவே...
நாம் முதலில் அரண்மனைக்குப் போவோம்... ஜுஹிரை ஏதாவது செய்ய முடியுமா பார்ப்போம்.
அங்கே பலத்த காவல் இருக்குமே!
அதற்கு நீ உன் யோசனையை சொல்!
என்னைக் கேட்டா எதிர்த் திசையிலே ஓட்டமா ஓடிப் போயிடலாம் னுதான் சொல்வேன்..
நானொரு தொடை நடுங்கின்னு இன்னுமா நீங்க புரிஞ்சுக் கலை?
இந்த இடம் கோட்டை மாதிரி இருக்கு... உள்ளேயும் வெளியிலேயும் பலத்த காவல்... வில்லி நம்மோடு தொடர்பு கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!
அவரைப் பற்றி உனக்கு தெரியாது.. பெஸ்ஸி.. அதனால்தான் அவ நம்பிக்கை யோடு பேசுகிறாய்!
நாளை இரவுக்குள் நம் மோடு அவர் தொடர்பு கொள்ளத் தவறினால் ஆக வேண்டியதை நாமே கவனிச்சுக்குவோம். உள்ளே எண்ணி மூணு காவலாளிகள்தான் இருக்கிறாங்க.
ஆனா... ஒவ்வொருத்தனும் முரட்டு கொரில்லா மாதிரி அல்லவா இருக்கிறான்!


அரண்மனையின் சுவர் அருகே - நிழலில்...
இந்தப் பக்கம் விளக்கு ஏதுமில்லை... நான் இரண்டாவது மாடி ஜன்னலை நோக்கி ஏறுகிறேன்... யாராச்சும் வர்றாங்களான்னு நீ காவல் நில்..
நானு.. காவலா.. ம்ம் - சரி!
வில்லி குறி வைத்த ஜன்னல் சுலபமாக திறக்க வந்தது...
படுக்கையறை மாதிரி இருக்கு... உள்ளே போயிட்டா அப்புறம் பிரச்னைகள் குறைவு.
பணியாட்களில் ஒருத்தன் மாதிரி இயல்பாக நடமாடி சமாளித்துக் கொள்ளலாம். எனக்கு அரேபிய மொழி தெரிந்திருப்பது ஒரு பிளஸ் பாயிண்ட்.
படுக்கையை ஒட்டிய விளக்கு திடுமென எரிந்தது...
ஓ.. வந்திட்டியா! என்னோட மோதிரத்தை நான் தேய்ச்சேன்... உடனே நீ வந்திட்டே!
இது என்ன குழப்பம்..?
ம்ம்.. ஹலோ.. என் பெயர் வில்லி - உன் பெயர்?
வில்லியா? பூதத்துக்கு இப்படி ஒரு பெயரா... வித்தியாசமா இருக்கே.. என் பேரு - கரீமா!


நான் எத்தனை வரம் கேட்கலாம்- சொல்லு!
ம்ம்.. வரமா?
பூதம்னு வரம் கொடுக்கணும் - தெரியாதா? வழக்கமா மூணு கொடுக்கும்!
நான் ஒரு மாயாவி என்று நினைக்கிறாள் இந்தச் சிறுமி... இல்லை நான் நிஜ ஆசாமின்னு சொன்னா நிச்சயம் கத்தி ஊரை கூட்டிடுவா.
அவளுடைய வழியிலேயே போய்விட தீர் மானித்தார் வில்லி.
உனக்கு என்ன வேண்டும் - சொல்.. கரீமா?
முதலில் - என்னோட சித்தப்பா ஜுஹிரை ஒரு தவளையா மாத்திடு!
இல்லே.. இல்லே.. சிலந் தியா மாத்திடு!
அப்படி நீ விரும்ப காரணம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?
ஏன்னா.. அவரை நெனைச்சாலே எனக்கு பயம்மா இருக்கு! எங் கப்பா விமான விபத்திலே செத்துப் போயிட்டார்னு வந்த சொன்னார்... ஆனு
நிச்சயம் அது சித்தப்பா வோட வேலையாத்தான் இருக்கும்.. என்னையும் ஏதாச்சும் பண்ணிடுவா ரோன்னு பயம்மா இருக்கு!



பயப்படாதே கரீமா! பூதம் நான் இருக் கேன்ல.. உங்க சித்தப்பா உன்னை ஏதும் பண்ணிடாம காப்பாற்று வேன்!
அத்தோட நீ பயப் படவும் தேவையில்லை.. ஏன்னா உங்க அப்பா சாகலை - உசிரோடதான் இருக்கார்.. கைதியா வச்சிருக்காங்க.
நிஜம்மாகவா..? இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?
நான் மாயாஜால பூதம் இல்லியா... எங்களுக்கு எல்லாமே தெரியும்.
எங்கப்பாவை ஜெயில் லேர்ந்து மீட்டுட்டு வா.. அப்புறமா எங்க சித்தப் ப்பாவை சிலந்திப் பூச்சியா மாத்திடு!
கரீமா.. நீ மோதிரத்தை தேய்ச்சு பூதத்தை அழைச்சப்போ வேதாள உலகத்திலே மற்ற பூதங்கள்லாம் பிஸியா இருந்திச்சு. அதனலே நான் வந்தேன்...
ஆனா உன்னோட துர திர்ஷ்டம் நான் அவ் வளவு சமர்த்து பூதம் இல்லை.. மக்கு.. அசடு..
..மந்திரங் களை நான் சரியா கத்துக் கிடலை... கத்துக் கிட்ட ஒண்ணு ரெண்டும் மறந்து போயிட்டுது -ஸாரிம்மா!
ஓஓ...


அழாதே... பூதம்! நீ சமார்த்து இல் லைன்னாலும் பாசமா நடந் துக்கிறே! உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!
மந்திர தந்திரங்கள் தெரி யாவிட்டாலும் உனக்கு என்னாலான உதவிகளை செய்யத்தான் போறேன்...
முதல்லே உன்னை உன் சித்தப்பா நெருங்க முடி யாதபடி எங்கேயாவது பத்திரமான இடத்துக்கு கொண்டு போய் சேர்க்க ணும்... டிரஸ்ஸை மாத்திக் கிட்டு கிளம்பு... சீக்கிரம்!
பாத்திமாதான் எனக்கு வழக் கமா டிரஸ் பண்ணி விடுவா..
இன்னிக்கு நீதான் ஒத்தாசை பண்ணணும்.
சிறுமிகளுக்கு டிரெஸ் பண்ணி விட்ட அனுபவம் இல்லையே -எனக்கு!
கர்னல் ஜார்ஜ் சில அக்காக்களை இங்கே கொண்டு வந்தாரே - அவங்களை நீ பார்த்தியா?
பார்க்கலை... ஆனா பாத்திமா சொன்னா - அவுங்களை கர்னல் அந்தப்புரத்திலே அடைச்சு வச்சிருக்காராம்!
என்னை இறுக பிடிச்சுக்கோ விட்டுடாதே கரீமா!
அப்படியே பறந்து தானே போகப் போறோம்?



மத்ததோட இந்த பறக்கிற தந்திரமும் மறந்து போயிட்டுது கரீமா.. கீழே வா - உனக்கு ஒரு ஆச் சரியம் காத்திருக்குது... காட்டறேன்!
ஓ.. கரீமா..! என் செல்லக் குட்டி!
உஷ்ஷ்..! ஜாஸிம்.. கத்தாதே இப்படி!
இதோ.. என் னோட பூதம்... மோதிரத்தை தேய்ச்சு வர வழைச்சேன். ஆனா இது சரியான மக்கு.. மந்திர தந்திரம் எதுவுமே தெரியலை.
எங்கப்பா சாகலை.. உயிரோட தான் இருக்காருனு சொல்லுது..
ஆனமட்டும் எனக்கு உதவி பண்றேன்னு சொல்லி யிருக்கு
பூ..பூதமா? ரீல் விடறதுக்கு ஒரு அளவே கிடையாதா? ஓ.கே... மிஸ்டர் பூதம்.. உன்னை சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம்!
அரண்மனை தோட்டத்தில் அடர்த்தியாக புதர் மண்டி யிருந்த இடத்தில்..
உங்க அப்பாவை காப் பாற்றணும்னா நான் போய் முதல்லே அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடக்கிற பொண்ணுங்களை மீட்க ணும்.. நீ இங்கேயே சமர்த்தா இரு... ஜாஸிம் உனக்கு துணை இருப்பான்.


அந்தப் புரத்தில்- இரவில்...
எந்த மாதிரி?
மாடஸ்டி... என் கட்டிலுக்கு அடியிலிருந்து யாரோ விசிலடிக்கிற மாதிரி சப்தம் வருது.
இதோ. இப்படி
வில்லி வந்திட்டார் போலிருக்கு.
கட்டிலுக்கு அருகே ஒரு சிறு காற்றுப் போக்கிஇருந்தது.
வில்லி.. என் குரல் கேட்கிறதா?
கேட்கிறது இளவரசி.. கொஞ்ச நேரம் எதுவும் பேசாதே... காவலாளிகள் இந்தப் பக்கமாக ரோந்து வருகிறார்கள்.
அந்தப்புர சுவர் அருகே கரிய போர்வை ஒன்றினால் போர்த்துக் கொண்டு பதுங்கிய நிலையில் இருந்தார் கார்வின்..
போயிட்டாங்க... இன்னும் ரெண்டு மூணு நிமிஷத்துக்குள் திரும்பி வரமாட்டாங்க... மேலே பேசு... இளவரசி
ஏதாவது ஆயுதங்கள் சேகரிக்க வசதி இருக்கிறதா?
அரண்மனை கட்டிடத்துக்கு பக்கத்தில் காவலாளிகள் அறையும், ஆயுத சாலையும் இருக்கு.. ஓசைப்படாமல் ஆயுதங்களை சேகரிச்சு வர அரை மணி நேரம் பிடிக்குமே..


பரவா யில்லை.. முடிஞ்ச வரை அள்ளிட்டு வாங்க.. வெளிலே இருக்கிற காவ லாளிகளை நீங்க கவனியுங்க.. உள்ளே இருக் கிற மூணு பேரை நாங்க கவனிச்சுக் கிறோம்!
திரும்பி வந்ததும் கதவில் நான்கு முறை லேசா தட்டுங்கள்.. உள்ளே வர உங்களுக்கு வசதி பண்ணித்தரோம்!
ஓ.கே.
என் கூட ஜாஸிமும், ஷேக் கின் மகள் கரீமா என்ற சிறுமியும் இருக்காங்க... மாயா ஜால பூதம் நான் என்று நம்பிக்கிட்டிருக்கு அந்தப் பொண்ணு... சரி - அப்புறமா வர்றேன்.
மாயா ஜால பூதமா?.. என்ன உளறிட்டுப் போறார்?
அப்புறமா அவரிடமே கேட்டு தெரிஞ்சுக்கு வோம் பெஸ்ஸி... வா.. போய் மூணு தடியன் களையும் அடிச்சு வீழ்த்தற வழியை பார்ப்போம்!
என்ன..? நாமா..? ஒவ்வொருத்தனும் கொரில்லா மாதிரி இருக்கிறான்!


இந்தப் பெண்களை கூட்டுச் சேர்த்துக் கொண்டு காரியத்தில் இறங்க நினைத்தால் பீதியும், குழப்பமும், கால விரயமும்தான் மிஞ்சும்..
நான் ஆரம்பிச்சு வைக் கிறேன் பெஸ்ஸி.. நீங்க வேடிக்கை பாருங்க..
எந்தக் கட்டத்திலே யாவது உங்களையும் நான் ஆட்டத்தில் சேர்த்துக்கலையேங்கிற மனக்குறை உங்களுக்கு ஏற்பட்டா நீங்களும் சேர்ந்துக்கோங்க..
அவளுக்கு பைத்தியம் தான் பிடிச் சிருக்கணும்...
அலங்காரப் பொருளை காவலாளியை நோக்கி வீசினாள் மாடஸ்டி...
ஹே.. சாம்ஸன் - எங்கே இதை பிடி.. பார்க்கலாம்
அவளை தடுத்து நிறுத் துங்க..
ணங்
இதெல்லாம் நிஜம்தானு...?
இவனை கட்டிப் போடுங்க.. ஆட்டம் ஆரம்பிச்சிடுச்சு... பாதியிலே நிறுத்த முடியாது.. மற்ற ரெண்டு குரங்குகளும் எங்கே இருக்குன்னு பாருங்க!



ஹேர..!
அங்கே எழுந்த ஆரவாரத்தை கேட்டு இரண்டாவது காவலாளி ஓடோடி வந்தான்..
மூனறாவது ஆள் என் பின்னாலிருந்து வந்துவிட்டால் கவனமாக பார்த்துக் கொண்டு நில் பெஸ்ஸி..
க்ளிங்
வெட்டரிவாள் எனக்கு தோதான ஆயுதமில்லை... ரொம்ப கனம்.. நீண்ட நேரம் பிடித்துக் கொண்டிருக்க முடியாது..!
இவனை வீழ்த்த சீக்கிரமே நான் ஒரு யுக்தியை தீர்மானிச்சாகணும்!
மூன்றாவது காவலாளி அங்கே பிரசன்ன மானான்..
மாடஸ்டி.. பின்னால் வர்றான்!
நெருக்கடியை உணர்ந்து கொண்ட பெஸ்ஸி சட்டென்று வீராவேச மானாள்...
நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க இது நேர மில்லை.. நாம் தலையிடா விட்டால் எல்லாமே கெட்டு குட்டிச் சுவரா போயிடும்!



மடேர்!
ம்ம்.. வாங்க... வந்து தாக்குங்க!
கத்தியை பிடிச்சிருக்கிற கையை முதல்லே கவனியுங்க..
பெஸ்ஸியின் தலைமையில் அந்த இளம் பெண்கள் கூட்டம் முனைந்து தாக்கியது.
அடி.. விடாதே -போட்டு அமுக்கு!
ஓ..வ்வ்! போச்சு என் மணிக்கட்டு!
கடவுளே...! இந்தக் கிங்கரனை நம்மால எப்படித்தான் அடிச்சு வீழ்த்த முடிஞ்சதோ?
தன்னை வெட்ட அரி வாளை ஓங்கிக்கொண்டு வந்த எதிரியை நோக்கி காட்டுக் கத்தலாக கத்தினாள் மாடஸ்டி..
வேண்டாம்.. நிறுத்து!


சரணடை கிறேன்..
ஆங்..?
அஹ்..!
பொறி கலங்கிப் போன எதிரியை தூக்கி விளாசினாள் மாடஸ்டி..
பெண்களே! உதவிக்கு நன்றி!.. இனி நீங்க விலகிப் போயிடுங்க... மிச்சத்தை நான் கவனிச்சுக்கிறேன்.
வேண்டாமே! நாங்களே தீர்த்துக் கட்டிடுவோம்!
மாடஸ்டி... நீ அங்கேயே நில்!
வாங்க.. பொண்ணுகளா.. அவள் ஒருத்தியா ரெண்டு பேரை அடிச்சு வீழ்த்திட்டா... நாம எல்லோருமா சேர்ந்து ஒருத்தனை வீழ்த்த முடியாதா என்ன?



அவனை என் கிட்டே விடுங்க..
ஆஆஆ..!
சபாஷ் பெஸ்ஸி... பரிசு உனக்குத்தான்!
காவலாளிகள் அறைப் பக்கமாகச் சென்று நோட்டம் விட்டார் கார்வின்...
ரெண்டு பேர் ட்யூட்டிக்கு போயிட்டாங்க... மூணு பேர் உட்கார்ந்திருக்கிறான்கள்! ஓசைப்படாம செய்து முடிக்கணுமே - எப்படி?
மறுநிமிடம் தோட்டத்துக்கு திரும்பி வந்தார் கார்வின்...
கரீமா.. உன்னோட மாய மோதிரத்தை கொஞ்ச நேரத்துக்கு இரவல் கொடேன்!
நீ கேட்கிறப்போ இல்லைம் பேனு? இந்தா
ஆனு.. இதை தேய்ச்சு இன்னொரு பூதத்தை வரவழைக் கிறதுக்கு இல்லியே?
இல்லை..! இதுக்கு வேறொரு உபயோகம் இருக்கு!


மோதிரத்தை பெற்றுக் கொண்ட கார்வின் காவலர் அறைக்குள் நுழைந்தார்..
பராக்கிரம சாலிகேள.. வணக்கம்!
யார்.. நீ?
ஏழை வழிப்போக்கன்! கையில் இருந்த பண மெல்லாம் செலவழிஞ்சு போச்சு... அடுத்த வேளை சோத்துக்கு என் கிட்டே இதுவரை நான் அரிய பொக்கிஷமா போற்றி வந்த மோதிரத்தை விற்றால்தான் என்கிற மாதிரியான நெலைமை.
என்னோட அருமை தாயாரின் ஞாபகார்த்தமா வச்சுக்கிட்டிருந்தேன்... ஹூம்.. அவளோட ஆத்மா என்னை மன்னிக்கணும்.
மோதிரத்தை மேஜை மீது வைத்தார் கார்வின்
ஏழை வயித்திலே அடிக் காதீங்க.. யாராச்சும் ஒரு நல்ல விலை கொடுத்து எடுத்துக்கோங்க.. உங்களுக்கு புண்ணிய -மாப் போகும்!
செம்பு...!
போலியை கொண்டு வந்து பித்தலாட்டம் பண்றேனேன்னு சந்தேகப் படறீங்களா.. நல்லா பரிசீலனை பண்ணிக் கோங்க.
அந்த சந்தேகம் தான்! இதோ இப்போ கண்டு பிடிச்சுடறோம்


ஆங்.. இப்படி யொரு வாய்ப் பைத்தான் நான் எதிர் பார்த்தேன்
மத்தவங்க பார்வையில் படாம நாம எப்படி அந்தப்புரத்தை நெருங்க முடியும் மிஸ்டர் வில்லி?
ஏன்..? காவலாளி நின்னா ஹலோ சொல்லிட்டு நேரா உள்ளே புகுந்துட வேண்டியதுதான்!
ஐயோ.. உனக்கு இப்படி திடீர்னு மூளைக் கோளாறு வந் திட்டுதே.. அல்லா!
வில்லி வந்தப் புறம் அடுத்த என்ன செய்யப் போறோம்
அவர் உள்ளே வர வசதி பண்ணிக் கொடுப்போம். அதைத் தொடர்ந்து உங்க எல்லோருக்கும் துப் பாக்கிகளை கையாளுவது எப்படின்னு ஒரு க்ளாஸ் நடத்தப் போறோம் பெஸ்ஸி.
என்ன சொல்றே நீ...? ஒரு முழு இராணு வத்தை எதிர்த்து நாம சண்டை போடப் போறோமா?
அனாவசியமா பெரிசு படுத்திப் பேசி சோர்வடையாதே பெஸ்ஸி.. ரெண்டு மூணு ரோந்துக் கார்களை கைப்பற்றிக் கிட்டு ஹாலா கோட்டை நோக்கி போகப் போறோம்..



ஷேக்கை முதலில் விடுதலை பண்ணிட்டோம்னு மத்ததெல்லாம் தானு சரியாயிடும்!
வித்தியாசமான பேர்வழிங்க நெறையப் பேரை என் வாழ்நாளிலே பார்த்திருக்கேன்... ஆனு இவளை மாதிரி ஒரு ஆளை நான் கேள்விப்பட்டது கூடக் கிடையாதுடியம்மா!
அந்தப் புரத்துக்கு வெளியே -
நில்லுங்க..!
ஓ... சிப்பாய் ஐயா... இப்படி நீங்க துப்பாக்கியை நீட்டி மிரட்டினு நான் பயத்திலே வெலவெலத்துப் போய் கையிலே இருக்கிற விலைமதிப்பற்ற மோதிரத்தை கீழே போட்டுடப் போறேன்.
கொஞ்சம் பொறு- விலையுயர்ந்த மோதிரம்னு ஏதோ சொன்னான்.. விசாரிப்போம்.
அவ்விரு காவலாளி களையும் வீழ்த்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள் கார்வினும், ஜாஸிமும்..
அந்தப்புர நந்த வனத்துக் குள்ளே பிரவேசிக்க உங்களுக்கு என்ன தைரியமடா.. நாய்களா..
இது அந்தப்புரம்னு தெரியாது.. மன்னிக்கணும்! என்னை உதவாக்கரையா வளர்த்துட்டாரு எங்க பாட்டனுர்.
மோதிரம் ஜோரா இருக்கு - எங் கேர்ந்தோ தேட்டை போட்டிருக் கான்.. இதை பறிமுதல் செய்துக்கு வோம்!
என்ன.. பேராசைப்பா உங்களுக்கு..!
வில்லி.. நான் இப்போ வெளியே வரலாமா?



வில்லி சைகை செய்ததும் அந்தப்புர கதவை திறந்து கொண்டு வெளியே வந்தாள் மாடஸ்டி..
ஆயதங்கள் கிடைச் சுதா...?
ஸ்டென் கன்.. மார்க் V ஒரு கழுதைப் பொதி!
என் பேரு கரீமா.. வில்லி என்னோட மாயா ஜால பூதம்! உங்களை ஜுஹிர் சித்தப்பாட்டோர்ந்து மீட்டுப் போக வந்திருக்கோம்!
வில்லி சரியான மக்கு பூதம்! மேஜிக் பண்றதெல்லாம் மறந்திடுச்சி! யாரும் அதைப்பத்தி பேசினா வருத்தப்படும்!
சரி. கண்ணமமா -மூச்சு விடலை!
ஸ்டென் கன்னை கையாளுவது எப்படி என்ற பயிற்சி வகுப்பு ஆரம்ப மானது..
கீழே ஒரு சிறு பட்டன் இருக்கு பாருங்க.. R' ன்னு குறியிட்டிருக்கிற பக்கம் அதை தள்ளி விட்டீங்கன்னா அப்புறம் விசையை நீங்க இழுக்கிற ஒவ்வொரு தடவையும் துப்பாக்கி ஒரு தடவை முழங்கும்.
ஆனா.. A' ன்னு போட்டிருக்கிற பக்கம் பட்டனை தள்ளி விட்டீங்கன்னா அப்புறம் நீங்க விசையை அழுத்திக் கிட்டிருக்கிற வரைக்கும்
அல்லது தோட்டாக்கள் தீருகிற வரைக்கும் துப்பாக்கி விடாம தொடர்ந்து முழங்கிக் கிட்டேயிருக்கும்.


அதாவது R' ன்னு 'ரிபெடிஷன்'..
A' ன்னு ஆட்டோமேடிக் - ஞாபகம் வச்சுக் கோங்க.. அடுத்து தோட்டாக்களை எப்படி திரும்பவும் நிரப்பறதுன்னு சொல்லித் தரேன்!
கற்றுக் கொண்டதை பெஸ்ஸியும் மற்ற பெண்களும் நடைமுறை பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த வேளையில் -
ஆறு..! காவலாளிகள் அறைக்கு தெற்கே நிறுத்தப் பட்டிருக் கின்றன.
ரோந்துக் கார்கள் எத்தனை வில்லி?
ரெண்டை எடுத்துக்கு வோம்... மற்ற நான்கை முடக்கிப் போட்டிடு வோம்.. ஜாலியா கிளம்பி போய்க்கிட்டே யிருப்போம்..
ஆனால் வில்லியின் விஷமத்தனம் தற்செயலாக ரோந்து வந்த கார்னலின் பார்வையில் பட்டுவிட்டது...
பிரதான காவல் படைக்கு தகவல் கொடு.. அந்தப் உள்ள பெணகளை சரி பார்..
ஹே.. மிஸ்டர் வில்லி.. ஓடியாங்க... ஏகப்பட்ட சிப்பாய்கள் ஆக்ரோஷத்தோட இங்கே ஓடி வர்றாங்க


அந்த கதவை அவசியப் பட்டால் தகர்த்துத் தள்ளுங்க.
நம் சூழ்ச்சி அம்பலமாகி விட்டது இளவரசி..
நம்மை சூழ்ந்து கொண்டது எதிரிகள் படை..
முற்றுகையை முறியடிப்பது கஷ்டம்.. எனவே, அவர் களுடைய கை ஓங்க விடக் கூடாது.
ஆல் ரைட். அனைவரும் சிறிய சாளரங்களருகே போய் நில்லுங்கள்
ஓ.கே... படித்த பாடங்களையெல்லாம் நடைமுறைப்படுத்திப் பார்க்கும் வேளை வந்துவிட்டது! தடை விசையை விலக்கிவிட்டு சுடத் தயாராகுங்கள்!
பயப்படும் படியா எதுவுமே இல்லை கரீமா.. தைரியமா இரு.. என்ன?
ம்ம்.. சுடுங்கள்!
இதோ..!
சரமாரியாக தோட்டாக்கள் எதிரிகளை நோக்கி சீறிக் கொண்டு போயின... இலக்கு
வைத்து சுடப்பட வில்லை என்ற போதிலும் விளைவு திருப்திகரமாக இருந்தது..
ரட்டட்டட்ட
அவர்கள் வசம் துப் பாக்கிகள் இருக் கின்றன..


பாதி - ஆடோமேடிக் நிலையில் துப்பாக்கியை வையுங்கள்..
இனி, யாராவது தென் பட்டால் மட்டுமே சுட்டால் போதும்..
ஆஹ.. சரியா அடிச்சுட முடியுமா?
நம்மோட வந்த அப்பாவி ஆண்களை எப்படி கிராதகத் தனமாக கொன்று குவிச்சாங்க என்பதை நினைவுக்கு கொண்டு வா உன் குறி தப்பாது!
இங்கே என்ன கலாட்டா.. கர்னல்?
வானத்திலேர்ந்து வந்து குதிச்ச ராட்சஸங்க யாரோ தங்களை அடிச்சுப் போட்டுட்டதா காவலாளிகள் சொல்றாங்க
அதில் எவ்வளவு உண்மை இருக்குதோ தெரியலை... ஆனுல் ஒன்று - அந்தப் பெண் களுக்கு யாரோ ஆயுதங்களை கொண்டு வந்து கொடுத் திருக்காங்க..
ஷேக்கின் பழைய மாடல் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு இரண்டு பெண்களை அழைத்துக் கொண்டு போனார் வில்லி..
இவற்றில் ஒன்றி ரண்டை கிளப்பிக் கொண்டு போகணும்..


வெளியிலிருந்து நமக்கு உதவி தேவைப்படுது ஜாஸிம்! ஷேக்கிடம் விசுவாசமாக உள்ள ஜனங்களை எங்கே பார்க்கலாம் - சொல்!
எல்லா ஜனங்களுமே விசுவாச முள்ளவங்க தான்.. மிஸ்...
ஆமா... கர்னலின் படை பலத்துக்கு எதிரா அவங்க என்ன செய்ய முடியும்?
அப்துல் பின் காலீப்பை மறந்துட்டீங் களே!
யார் அது.. கரீமா?
நானா?
மலை ஜாதி மக்களோட தலைவர்! - எங்கே அப்பாவோட பழைய நண்பர்... ஜாஸிம் அவரைப் போய் சந்திக்கணும்!
நான் வில்லியை பார்க்கப் போறேன்..
நீ இங்கே சமாளிச்சுக் குவியா?
ஓ..! பெண்கள் எல்லோரும் சுடுவதில் ரொம்ப தேர்ச்சி பெற்று விட்டார்கள் - அதற்குள்!
அங்கே -
ஜாஸிமை இங்கிருந்து வெளியே அனுப்பிச்சா உதவி கோரிப் பெற்று வர இயலும்னு தோணுது
எனக்கும் அதே சிந்தனைதான்!


பயணம் கடினமாக இருக்கும் இது தாக்குப் பிடிக்குமா?
இது.. 1911 வருடத்திய ரோல்ஸ் ஸில்வர் கோஸ்ட் - சூப்பர் வண்டி..!
டாங்க் மாதிரி உறுதி யானது... ஆனால் கரடு முரடான சாலையிலும் ஓசைப்படாமல் ஓடும்... பெட்ரோல் நிரப்பப் பட்டு பயணத்திற்கு ரெடியாக இருக்கு...
இந்த மாதிரி ஒரு காரை ஓட்டணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை..
கிளம்புங்க.. சீக்கிரம்!
வெளியே!
நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர உடனடியா ஏதாவது செய்யணுமே.. கர்னல்!
ம்ம்..ம்ம்.. ஆனா -
...நூறு வீரர்களில் பாதிப் பேர் அங்கங்கே கண் காணிப்பு மையங்களில் நிற்கிறார்கள்.. மிச்சம் இருக்கிறவங்களை இந்த தோட்டா மழையை எதிர்த்து வழி நடத்திச் செல்வது தற் கொலைக்கு ஒப்பா யிடும்..


அதனால்..?
அதனால்... கார்கள் நிற்கும் மியூஸியத்தின் வழியாக உள்ளே நுழைய முயற்சிக்கப் போகிறேன்.
அங்கேயோ-
ஏறிக்கோ ஜாஸிம்... போகலாம்!
மிஸ்டர் வில்லி.. இந்த பயணத்தாலே
எந்த பிரயோ ஜனமும் இருக்கப் போற தில்லை...
ஏன்னா.. அப்துல் ஒரு சந்தேகப் பேர்வழி.. நாம சொல்றதை அவன் லேசிலே நம்ப மாட்டான் - ஆதாரம் இருக்கான்னு கேட்பான்!
ஆதாரம்.. நான் இருக்கேன்.. ஷேக்கோட மகள் நான்.. நான் சொன்னா அப்துல் நிச்சயம் நம்புவார்.
நானும் உங்க கூட வர்றேன்!
சரின்னு படலை... ஆனா வேற வழியில்லை
மியூஸியத்தை சுற்றி அடுக்கிக் கிடந்த மணல் மூட்டைகளை காரில் நிரப்பினார்கள்.
நீ நல்லா குனிந்து பதுங் கிக்கணும் - கரீமா!


நீ தொடர்ந்து துப்பாக்கியை முழக்கிக்கிட்டே வரணும் ஜாஸிம்! என் தலையை விட்டுடணும்.. என்ன?
முயற்சி பண்றேன்!
நீங்க வெளியேற தகுந்த பாதுகாப்பு கொடுக்கும்படி பெஸ்ஸி குழுவினருக்கு சொல்றேன்.
நாமும் தான் ஒரு சூழ்ச்சி பண்ணப் போறோம் பெஸ்ஸி
எதிரிகள் ஏன் நம் மீது பாயலை.. ஏதாச்சும் சூழ்ச்சி பண்ண நினைக்கிறாங்களோ..?
வில்லியோட கார் அடுத்த முப்பதாவது செகண்டில் பாய்ந்து கிளம்பப் போகுது.. நாம அவருக்கு பாதுகாப்பு கொடுக்கணும்...
ஓ.கே.
எல்லோரும் பட்டனை A' பொறிக்கப்பட்டுள்ள பக்கமா தள்ளி வச்சுக்கிட்டு ரெடியா இருங்க..


ஒரு சில கணங்-களுக்குப் பின் -
ஓ.கே. கதவை திற.. இளவரசி!
வாசலுக்கு வெளியே-
நாம் ரோந்துக் காரை நேராக மியூஸியத்தின் தலைவாசல் வரை ஓட்டிச் செல்கிறோம். அதையடுத்து -
சார்
கதவு திறக்கிறது..
ஸில்வர் கோஸ்ட் பாய்ந்து வெளியேறி அரண்மனை கட்டிடத் தையும் தாண்டிக் கொண்டு முன்னேறிய போது அந்தப்புர பகுதியிலிருந்து தோட்டாக்கள் சரமாரியாக வந்தன - பாதுகாப்பு நல்க!
அந்தக் காரை குறி வச்சு.. சுடுங்கள்.



என் பங்கிற்கு நானும் எதிரிகளை குறிவச்சு சுடறேன்..
ஆனா தோட்டா யாரையும் தாக்கும்னு தோணலை...
அது அவசியமில்லை... அவர்களை கலவரப் படுத்தி நெருங்க விடாமல் பண்ணினாலே போதும்!
மீண்டும் மியூஸியத்தின் கதவுகள் மூடிக் கொண்டு விட்டன..
வில்லியை நெனைச்சாத் தான் வேதனையா யிருக்கு - தப்பிச்சுக் கிட்டிருப்பாரா?
உன் கேள்விக்கு விடை அப்புறமாத்தான் தெரியும் பெஸ்ஸி! இந்த ஆட்டத்தில் எதற்குமே உத்தரவாதம் கிடையாது!
வில்லியின் கார் சாலையை தொட்ட போது -
சார்ஜண்ட் அஸாத்! ஒரு ரோந்துக் காரில் நாலு பேரை ஏற்றிக் கொண்டு விடாமல் துரத்து அவர் களை
ஸில்வர் கோஸ்ட் மணிக்கு 80 மைல் வேகத்தில் பாலை வனத்தினூடே பாய்ந் தோடியது.
அலுங்காமல் குலுங்காமல் எப்படி வழுக்கிக் கிட்டு ஓடுது பார்த்தாயா ஜாஸிம்!



சற்றுத் தொலைவில் தெற்கு நோக்கி ஒரு சாலை போகுது மிஸ்டர் வில்லி... ரொம்ப கரடு முரடா இருக்கும்...
அதற்கெலலாம் இது அஞ்சாது.. ஜாஸிம்
அரண்மனை வளாகத்தினுள் -
காரை கதவுக்கிட்டே கொண்டு போய் நிறுத்தி விட்டு, வெளியேறி குதித்து ஓடி வந்து விடு... ப்யூஸ் ரொம்ப நீளம்.. உனக்கு போதிய அவகாசம் இருக்கும்... கலவரமடையத் தேவை யில்லை.
ஒரு ரோந்துக்கார் இங்கே வருது... மாட்ஸ்டி நீ சொன்னது சரியாப் போச்சு!
..அதன் முகப்பில் ஒரு ப்யூஸ் எரிந்து கொண்டிருக் கிறது..
போர்வையை நனைச்சு கையிலே எடுத்துக் கிட்டு ரெடியா இரு..
கார் கதவை நோக்கி விரைந்து நெருங்கியது
புகைப் படலத்தை உருவாக்கி யுள்ளார்கள்..
ஆனா.. அதனாலே எந்த இடைஞ்சலும் வராது... கார் கச்சிதமா போய் கதவை நெருங்கிடும்.



எதிரே எதுவும் தெரியாத நிலையில் தொடர்ந்து காரை செலுத்திச் சென்ற டிரைவர், கதவு இப்போது திறந்து கிடப்பதை அறியாமல் உள்ளே புகுந்து விட்டான்.
முழுக்க உள்ளே வந்ததும் கதவை மீண்டும் சாத்தி தாழிடுங்கள்..
ஈரப் போர்வையால் ப்யூஸை அணைத்தாள் மாடஸ்டி.
நான்.. எங்கே இருக்கிறேன்
கார் முட்டிக் கொண்டு நின்றதும், குழப்பத் தோடு கீழிறங்கினான் டிரைவர்...
என்ன ஆச்சு?
ஆவ்வ்..
அம்மாடியோவ்... உதையா இது!
என்ன ஒரு லாவகம் பார்த்தாயா
அந்த ரோந்துக் காரில் ஏறி அதை அரை வட்ட மடித்து திருப்பினாள் -எதிர் திசையை நோக்கி..
ப்யூஸை மறுபடியும் எரிய விடு டெஸ்ஸி.. பிறகு கதவை திற - கார் அவர்களிடமே திரும்பி போகச் செய்வோம்!


ரோந்துக் கார் எங்கேதான் போய்த் தொலைந்தது?
கதவைத் திறந்து உள்ளே வர விட்டிருக்குமோ அந்த பிடாரிகள் கூட்டம்!
ஆச்சு..! இனி கதவை இறுகச் சாத்தி விடுங்கள்
டைனமைட் பார்சலை சுமந்து கொண்டு, முதல் கியரில் நிதானமாக ஓடிய அந்த ரோந்துக் கார் எதிரிகளை நெருங்கியது...
திரும்பி வருது.. பாய்ந்து ஓடிப் பதுங்குங்கள்!
காரிலிருந்த டைனமைட் வெடித்த போது மேலும் இரு ரோந்துக் கார்கள் நாசமாகிப் போயின..
பூம்ம்ம்!
அரை டஜன் பொம்பளைங்க உன் முஞ்சியிலே கரியை பூசிட்டாங்களே... கர்னல்! உன்னோட டைனமைட்டாலே உனக்கே நாசத்தை ஏற்படுத்திட்டாங்க.. வெட்கக் கேடு!
ஆஹ... எப்படி?
ஜுகிர் கர்னல் மேலே பாயறான்... அவர்களுக்கிடையே சிண்டு முடிஞ்சு விட அருமையான சந்தர்ப்பம்...



ஜுஹிர்..! உன்னோட அண்ணன் ஷேக் -காதிம் - அல் -மாஸ்ப செத்துவிட்டார்னு நீ நினைக்கிறாயா?
நீ உத்தரவிட்டது போல ஜார்ஜ் அவரைக் கொல்லவில்லை அவர் உயிரோடுதான் இருக்கிறார்!
என்ன.. அண்ணன் உயிரோடு இருக் கிறாரா..? உன் வஞ்சக நாடகமா?
ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஜுஹிர்! அப்புறம் தனியா அது பற்றி பேசுவோம்.. என் கிட்டே முறைச்சுக் காதே.. இங்கே இருக்கிற படை என்னோடது - மறந்திடாதே!
உன் யுக்தி பலிச் சுட்டுது.. ஜுஹிரும் கர்னலும் அடிச்சுக் கிறாங்க.. வாக்கு வாதம் பண்ணிக்
கிட்டே ரெண்டு பேரும் அப்பாலே போயிட் டாங்க.. சிப்பாய்கள் குழப்பத்தாலே ஒய்ஞ்சி போய் நிற்கிறாங்க.
நமக்கு கொஞ்சம் அவகாசம் கிடைச் சிருக்கு... அவங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதும் திரும்பி வருவாங்க... அப்போ நமக்கு ரொம்ப கஷ்டமாயிடலாம்!
உதவி கோரிப் போன வில்லி சீக்கிரமே வெற்றியோடு வந்தால் நல்லது..
ஸிபரைன் மலைப் பகுதியில் -
இனி வலப்பக்கம் திரும் பணும்... மிஸ்டர் வில்லி.. அப்துல் - பின் - காலீப்பின் இடத்தை ஏறத்தாழ நெருங் கிட்டோம்!



சற்றைக்கெல்லாம்-
நீ சொல்றது நம்ப முடியாததா இருக்கு ஜாஸிம்.. இந்த இங்கிலீஷ்காரர் ஏதேதோ சொல்லி உன்னை குழப்பி விட்டிருக்கிறார்ன்னு நெனைக்கிறேன்.
சொன்னேனில்லையா...? சரியான சந்தேகப் பேர்வழி.. லேசிலே வழிக்குக் கொண்டு வர முடியாது.
அப்துல் - பின் - காலீப்... நான் பிறந்தப்போ தன்னோட பழைய நண்பருக்கு காட்ட என்று என்னை எங்க அப்பா இங்கே கொண்டு வந்தார்.
ஆமாம்..
ஷேக் காதிம் - அல்.. மாஸ்பாவின் மகளான நான் - கரிமா - சொல் கிறேன்.. என் சித்தப்பா ஜுஹிரின் நயவஞ்சகம் பற்றி ஜாஸிம் சொன்னது அத்தனையும் நிஜம்!
இந்த இங்கிலீஷ் காரர் உன்னையும் குழப்பி விட்டி ருக்கிறார் என்று தான் நான் சொல்வேன்!
இனியும் இங்கே நேரத்தை வீணடிச்சுக் கிட்டிருக்க நான் தயாரில்லை!



ஏய்.. மர மண்டை - ஷேக் சார்பில், அவர் விருந்தாளியா அழைச்சு வந்த ஏழு பொண்ணுங்க ஜுஹிரை எதிர்த்து போராட்டம் நடத்திக்கிட்டிருக்காங்க.. நீயானு எல்லாவற்றையும் சந்தேகப்பட்டுக் கிட்டு விதண்டாவாதம் பண்ணிக் கிட்டிருக்கிறே சாவகாசமாய்..
கரீமா.. இங்குள்ள மலை ஜாதி பெண்களை அழைத்து வா - போ! துப்பாக்கியை எடுத்துக் கிட்டு குதிரையிலேறி அவங்க கிளம்பட்டும்.. குழந்தைகளை குளிப் பாட்டி ஆடு மாடுகளை பால் கறக்கிற வேலைகளை இந்த ஆம்பளைங்க பார்த்துப்பாங்க.
என்ன ஒரு சொல் சொல் லிட்டே.. நீ?
எல்லா ஆண்களும் ஏறுங்க.. குதிரையிலே -சீக்கிரம்!
ஒரு ரோந்து கார் நம்மை பின் தொடர்ந்து வருது... வழியிலே மடக்கி அதை வசப்படுத்திக்கலாம்... ஷேக்கை ஹாலா கோட்டையிலே சிறை வச்சிருக்காங்க... அங்கே நிறைய சிப்பாய்கள் இருப்பார்களோ?
சின்னக் கோட்டை அது.. மிஞ்சிப் போனால் எட்டுப் பேர் இருக்கலாம்!
குட்..! ரோந்துக் காரை வசப்படுத்திக் கொண்டதும் நம் ஆட்கள் சிலருக்கு இராணுவ சீருடையை மாட்டிவிட்டு ஹாலா கோட்டை நோக்கி அனுப்பிச்சு வைப்போம்!
அருமையா திட்டம் தீட்டறீங்க.. இங்கிலீஷ்காரரே - உங்களை எனக்கு பிடிச்சுப்போச்சு!
அவர் இங்கிலீஷ் காரர் இல்லே அப்துல்- என்னோட மாயா ஜால பூத மாக்கும்!


சூரியன் கீழ்த்திசை வானில் மேலெழும்பத் தொடங்கிய வேளையில் -
என்ன யோசனை?
அந்த கூட்டத்திலே கச்சித குறி வச்சு அடிக்கிற பிசாசு ஒண்ணு இருக்கு... சிப்பாய்களின் எண்ணிக்கை படு வேகமா குறைஞ்சிக்கிட்டு வருது - நல்லதில்லை!
இன்னொருத்தனை வீழ்த்திட்டே மாடஸ்டி.. முன்னேறி வர தயங்குறாங்க பார்..
நம் வசம் பிளாஸ்டிக் வெடியும் கை வெடி குண்டும் தாராளமா இருக்கு... முகப்பு வாசல் கதவை தகர்த்துட்டோம்னு நம் கை ஓங்கிடும்!
எதிரிகள் ஓய்ந்து விட்டார்களா... சலசலப்பையே காணோமே
அவள் அதை சொல்லி முடிக்கு முன் வெடி குண்டு தாக்குதலால் முகப்பு கதவு
பூம்!
கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வர நினைக்கிறார்கள் போலிருக்கு - ஓடிப் போய் மாடஸ்டியிடம் சொல்!


இரண்டாவது வெடிகுண்டு கதவை ஓரளவு சிதைத்து விட்டது
நாம் தொலைந் தோம்!
கலவரமடையத் தேவை யில்லை.. கதவு தகர்ந்து விழுந்ததும் பிர மாதமாக சாதித்து
விட்ட இறுமாப்பில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கும்பலாக உள்ளே ஓடி வருவாங்க..
..கொஞ்ச நேரத்துக்கு சுடுவதை நிறுத்தி, அவர்கள் அனைவரும் உள்ளே வந்த பிறகு சரமாரியாக குண்டுகளை பொழிய வேண்டும்... அப்படியொரு அதிரடி நமக்கு முதல் கட்ட வெற்றியை உறுதி செய்யும்.
அதற்கப்புறம்
வீணா அலட்டிக்காதே டெஸ்ஸி.. அப்புறம் வர்றதை பிறகு பார்த்துக்கலாம்!
முகப்பு கதவு தகர்ந்து விழுந்ததும் -
பாய்ந்து முன்னேறிச் செல்லுங்கள்.. உள்ளே!
ஸார்! அங்கே பாருங்க..!
அப்துல் - பின் - காலீப் பின் ஆட்கள்!


ஹே... பெண்களே.. நான் உங்கள் பக்கம் - அதற்குள் மறந்து விட்டீர்களா?
அட - வில்லி!
படை வீரர்களை உண்டு இல்லைன்னு பண்ணிட்டே போலிருக்கு இளவரசி.. நிலை குலைந்து போய் தடு மாறி நிற்கிறார்கள்.
கர்னல் ஜார்ஜ் இனியும் இங்கே நிற்க மாட்டான்.. தப்பியோடவே நினைப்பான் - விட்டு விடக்கூடாது!
ம்.. போதும்! வாங்க போய் மிச்சமிருக்கிற வங்களையும் தீர்த்துக் கட்டுவோம்!
இதுவரை நீங்க பண்ணினதே போதும் -பெஸ்ஸி... இந்த மாதிரி வேலை எல்லாம் இனி உங்களுக்கு வேண்டாம்!
நீங்க இவர்களோட இருங்க வில்லி - எனக்கு அங்கே ஒரு வேலை பாக்கி யிருக்கு!
சரி.. ஜாக்கிரதையா போய் வா - இளவரசி!
நெடுஞ்சாலையில் ஸில்வர் கோஸ்டை உச்ச வேகத்தில் ஓட்டிச் சென்றாள் மாடஸ்டி..


அரண்மனையிலிருந்து இரண்டு மைல் தொலைவில் வேறொரு காரும் புயல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது...
சாலை சற்று குறுகி வளைந்த ஒரு திருப்பத்தில் - மாடஸ்டியின் கார் மறைவில் தயாராக காத்துக் கொண்டிருந்தது.
வேகத்தில் உனக்கு ஈடு யாரும் இல்லை என்று எங்கே காட்டு பார்க்கலாம்!
கர்னல் தன் காரை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினாள் மாடஸ்டி.
இப்படி நீ தப்பியோட நினைப்பாய் என்று எனக்குத் தெரியும்!
சண்டாளி.. என் திட்டத்தை தவிடு பொடியாக்கி விட்ட சனியனே - உன்னை நான் கொல்லாமல் விடப் போவதில்லை!
நீ கொன்று குவித்தாயே - எங்களோடு வந்த அப்பாவி ஆண்களை...! அதற்கு இப்போது நான் உன்னை பழி வாங்கப் போகிறேன்!
கர்னல் தன் துப்பாக்கியை உயர்த்திய கணத்தில் காங்கோ மாதிரி ஒரு ஸ்பானரை கையில் பிடித்துக் கொண்டு அவன் மீது புலிப் பாய்ச்சலாக பாய்ந்தாள் மாடஸ்டி..



தடுமாறி விழுந்த கர்னலை பலம் கொண்ட மட்டும் ஓங்கி அடித்தாள்..
மலை ஜாதி வீரர்களால் விடுதலை செய்யப்பட்டு அரண்மனை நோக்கி வந்து கொண்டிருந்த ஷேக் காதிம், அதன் பின் அங்கே நடந்ததை நேரில் காணும் வாய்ப்பு பெற்றார்.
அது.. மிஸ் மாடஸ்டி அல்லவா!
கர்னல் ஜார்ஜ் - உண்ட வீட்டுக்கு
ரெண்டகம் நினைத்த துரோகி!
செத்துவிட்டான்... பிரபு! அத்தோட உங்க ஸில்வர் கோஸ்டை இப்போ பார்த்தீங்கன்னா நிச்சயமா உங்க கண்ணிலே ஜலம் வந்திடும்!
அரண் மனையில் -
ஏன் நான் போய் சண்டை நடக்கிறதை வேடிக்கை பார்க்கக் கூடாதுங்கறே ஜாஸிம்?
உன்னை இங்கே கொண்டு வந்து சேர்த்து பத்திரமா பார்த்துக்கச் சொல்லி எனக்கு உத்தரவிட்டிருக்கிறார் மிஸ்டர் வில்லி. அத்தோட இப்போ அங்கே சண்டை நடக்கலை... எல்லாம் முடிஞ்சி போச்சு!
ஆமா... உன்னோட அப்பா விடுதலையாகி வந்திட்டாராம் - அவரை பார்க்க நாம போகலாம்... கிளம்பு!
ஜுஹிர் சித்தப்பா!
டேய்.. துரோகி! இவள் மீது கை வைக்க உன்னை அனுமதிக்க மாட்டேன்.. போயிடு மரியாதையாய்!


ஏய்.. குட்டி - நீ விலகிப் போயிடு!
இந்த பாரு.. கிட்டே வராதே - மீறி வந்தாய் என்றால் எப்பவோ நான் சினிமாவிலே பார்த்த கராத்தே அடி கொடுத்து உன்னை வீழ்த்திப்புடுவேன்.. ஜாக்கிரதை!
ஆனால் ஜாஸிமின் 'வீரம்' ஜுஹிருக்கும் தெரியுமாதலால் அலட்சியமாக நெருங்கிச் சென்று கத்தியால் தாக்கினான்..
ஆ..வ்வ்!
உன்னை ஏன் நான் இங்கேயே கொன்னு போடலைன்னா, என் அண்ணன் இப்போ இருக்கிற இடத்துக்கு வழிகாட்டி கூட்டிப்போக ஆள் வேணும்கிற ஒரே காரணம்தான்!
இனி அமைதியா ஓய்வு எடுத்துக்கலாம் பிரபு..! அப்துல் - பின் - காலீப் நிலைமையை கட்டுக்குள் வச்சிருப் பார்னு நம்பலாம்!
என் அருமை மகள் கரீமாவை நான் பார்க்கணும்!
அப்போது தட்டுத் தடுமாறி உள்ளே பிரவேசித்தான் ஜாஸிம்
பிரபு.. நான் எவ்வளவோ தடுத்தும். உங்க தம்பி ஜுஹிர் கரீமாவை கவர்ந்திட்டான்.
எங்கே.. அவன்?
இதோ.. இங்கேதான் இருக்கிறேன்- அண்ணா!


யாரும் அசையக் கூடாது.. இல்லையேல், இந்தக் குட்டி பிணமாகிப் போவாள்.
..நாட்டு எல்லையை நான் தாண்டும் வரை என் பாதுகாப்புக்கு இவளை பிணையாக கொண்டு செல்லப் போகிறேன்!
அவளை எப்படியும் அவன் கொன்று போட்டு விடுவான்.. வில்லி.. அவனை நீங்க தான் எப்படியாவது வீழ்த்த வேண்டும்!
ஆமா.. ரொம்ப எச்சரிக் கையா இருக் கிறானே!
நான் பத்திரமாக நாட்டை விட்டு வெளி யேற உத்தரவாதம் தர முடியுமா.. முடியாதா - காதிம்?
ராட்சஸனே.. உன் இஷ்டிப்படியே நடக்கட்டும்!
அவன் நிமிர்ந்து நின்றால் நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கலாம்..
இந்தாருங்கள் கத்தி.. தயாராக இருங்கள்!


கரீமாவை பற்றியவாறு ஜுஹிர் பின்னுக்கு நகரத் தொடங்கிய கணத்தில், சிறுமியின் தலைக்கு மேலாக பறந்து போய் அவனுடைய தொண்டையில் இறங்கியது வில்லி வீசிய கத்தி
அஅ..ஹ்!
அககணமே செத்து விழுந்தான் ஜுஹிர்
கரீமாவை அப்பால் கொண்டு போ... இளவரசி!
எ.. என்ன நடந்துச்சு? சித்தப்பா நிச்சயம் என்னை கொன்று போட்டுடுவாருன்னு நடுங்கிக்கிட்டிருந்தேன்!
வில்லி - உன்னோட மாயா ஜால பூதம் - நல்லவேளை ஒரே ஒரு மந்திரத்தை நல்லா ஞாபகம் வச்சிக் கிட்டிருந்தது..
அதைத் தொடர்ந்து-
ஓ.. அல்லா.. நான் ஜுஹிருக்கு எதிராக எவ்வளவு வீரதீரமா சண்டை போட்டேன்:. இப்போ ஒரு சுத்த வீரனாக சாகப் போகிறேன்.
சாகப் போகிறாயா?




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும்,
ஆசிரியரும் : S. *விஜயன்*, முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ. எண் : 374,
சிவகாசி - 626 123. ஃபோன் : 20649, வெளியீடு எண் : 102
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123. போன் : 21159



சிரிப்பின் நிறம் சிவப்பு!
டாடா!
யுத்தத்திற்கு போகும் முன்பு குடும்பத்தாரிடம்
பிரியா விடை பெறுவது ரொம்ப கஷ்டமான சமாச்சாரம்!
கஷ்டம்னு உனக்கு என்ன தெரியும்? என் கூமுட்டை குதிரையை பிடிக்கும் வேலையிருக்கே - அதுதான் கஷ்டம்!
லோகோ கண்ணா!
போச்சுடா..! சண்டைக்கு கிளம்பிட்டானா முட்டைகோஸ் மூக்கன்!
உடனே ஏதாவது மாறுவேஷம் ரெடி பண்ணனுமே!
ஆங்! இப்படி பாம்பு மாதிரி புல்லுக்குள்ளே பதுங்கிட்டா இண்டியன் கண்ணில படாம தப்பிக்கலாம்!
சர்ர்... சர்ர்...
ஹை! ஹை! ஹை! ஹோ! ஹோ! ஹோ!
நிஜப் பாம்பு களுக்கெல்லாம் எப்படித்தான் வயித்துலே புல் கிச்க மூக்க முட்டாம இருக்குமோ தெரியலையே சாமி!
(முற்றும்)

# ஓவியப் போட்டி




பரிசு! ஒரு ஸ்கெட்ச்-பென் செட்!

↑ வாசக ஓவியர்.

# Top 10 ஹீரோக்கள்

**சென்சுவரி ஸ்பெஷலில்** நமது முக்கிய கதாநாயகர்களில் பத்துப் பேரை பட்டியலிட்டு அவர்களை உங்கள் விருப்பத்திற்கேற்ப வரிசைப் படுத்தக் கேட்டிருந்தேன். ஏராளமான வாசகர்கள் தங்கள் தேர்வை அனுப்பியுள்ளனர். நிதானமாக அதைப் பரிசீலித்து முடிவை இதோ வெளியிட்டிருக்கிறேன்.

நம்பர் ஒன் ஹீரோ : **டெக்ஸ் வில்லர்** (ஏகோபித்த தீர்மானம்! போட்டியின்றி தேர்ந்தெடுக் கப்படுகிறார்!)



இரண்டாவது இடம் : **ஸ்பைடர்** (குற்றச் சக்கரவர்த்திக்கு இன்னும் எக்கச்சக்கமான ரசிகர்கள் உள்ளது புரிகிறது!)



மூன்றாவது இடம் : சி. ஐ. டி. ஜான் மாஸ்டர்

நான்காவது இடம் : மாடஸ்டி பிளைஸி



ஐந்தாவது இடம் : இரட்டை வேட்டையர்

ஆறாவது இடம் : காரிகன்

ஏழாவது இடம் : இரும்புக்கை நார்மன்

எட்டாவது இடம் : ரோபோ ஆர்ச்சி

ஒன்பதாவது இடம் : ரிப் கிர்பி

பத்தாவது இடம் : மின்னல் படை



— ஆசிரியர்

# க்ரைம் க்விஸ் (8) & (9) விடை

சென்சுவரி ஸ்பெஷலில் வெளியான க்ரைம் க்விஸ் (8) & (9) க்கு சரியான விடைகளை அனுப்பியிருந்த வாசகர்களுள் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படும் அதிர்ஷ்டசாலிகள் :





1) **M. ராஜேந்திர பிரசாத்,**
S/o. D. மணிமொழி (R.I.)
பெரியார் நகர், முதல் தெரு,
அரியலூர் - 621 704.

2) **R. மணிமாறன்,**
E-15, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
இராசிபுரம் (P.O.) - 637 408.

3) **ச. குமார்,**
22, கன்னிகா பரமேஸ்வரி தெரு,
போளூர் - 606 803.

வாழ்த்துக்களுடன் வழக்கம் போல் ரூ. 75/-க்கான பரிசு இவர்களுக்கு! இனி சரியான விடையைப் பார்ப்போமா?

## க்ரைம் க்விஸ் 8

புரபஸர் டும்பெல் நீண்ட நேரமாய் வீட்டிலேயே தனியாக இருப்பதாகக் கூறினார். அப்படியிருக்க அவரது குடையிலிருந்து நீர் சொட்டுகின்றதே! ஆசாமி மழைக்குள் வெளியேறிப் போய் கொலை செய்து விட்டு வந்திருக்கிறார் என்பதை இன்ஸ்பெக்டர் டேஞ்சர் உடனே கண்டு பிடித்துவிட்டார்.

# க்ரைம் க்விஸ் 9

இன்ஸ்பெக்டர் டேஞ்சர் டாய்லெட்டிற்கு போகும் முன்பு, இடது புறத்தில் இரண்டாவது மனிதன் செவ்வக வடிவக் கண்ணாடி அணிந்திருந்தான். டாய்லெட்டிலிருந்து இன்ஸ்பெக்டர் வந்த போதோ வட்ட வடிவக் கண்ணாடி அணிந்திருக்கின்றான்! அவனே குற்றவாளி என்பதை டேஞ்சர் கண்டு பிடித்துவிட்டார்.



**க்ரைம் க்விஸ் 12க்கு**
**விடையனுப்பக் கடைசித் தேதி**
**15-8-94**



விடையனுப்பும் போது இந்தக் கூப்பன் கட்டாயம் தேவை!

***க்ரைம் க்விஸ் - (12)***
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண் : 374, சிவகாசி - 626 123



# Sorry!

சமீபத்தில் வெளிவந்த நமது சென்சுவரி ஸ்பெஷலிற்கு ரூ. 16/- M.O. செய்தால் தபால் மூலம் புக் அனுப்புவோம் என்று அறிவித்திருந்தோம் அல்லவா? அதைத் தொடர்ந்து ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் பணம் அனுப்பி பதிவு செய்திருந்தனர். பிரதிகள் தயாரானவுடன் தபால் மூலம் அனுப்பிவிட்டு விபரம் தெரிவிக்க ஒரு போஸ்ட் - கார்டும் நாங்கள் போட்டோம்! ஆனால் -

பெரும்பான்மையான வாசர்களுக்கு சென்சுவரி ஸ்பெஷலும் கிடைக்கவில்லை - போஸ்ட் கார்டும் கிடைக்கவில்லை! அஞ்சல் துறையிலும் நமக்கு நிறைய ரசிகர்கள் இருப்பது இப்போது தான் தெரிகிறது! ஹ்ம்ம்ம்ம்.....!

- நிர்வாகி -

# Top 10 கதைகள்

டியர் ரீடர்ஸ்,

இதுவரை வெளிவந்துள்ள நமது 100 வெளியீடுகளில் மிகவும் அருமையான பத்து கதைகளைத் தேர்ந்தெடுக்கும்படி சென்சுவரி ஸ்பெஷலில் கேட்டிருந்தேன் அல்லவா? ஏகோபித்த வரவேற்பு பெறும் அந்தப் பத்து கதைகள் மறுபதிப்பு செய்யப்படும் என்றும் அறிவித்திருந்தேன்.

ஆனால் வாசகர்களின் தேர்வுகள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன! பாதி வாசகர்கள் தங்களிடம் கைவசம் இல்லாத பிரதிகளின் பெயரைக் குறித்து அவற்றை மறுபதிப்பு செய்யுங்கள் - என்று எழுதியுள்ளனர்.

ஆகையால் இந்த விஷயத்தில் எனது Personal Selection படி முதல் பத்து இடங்களைப் பிடிக்கும் கதைகளை இங்கே தருகிறேன்! இதிலிருந்து நீங்கள் தேர்வு செய்யும் 5 கதைகள் மட்டும் மறுபதிப்பு செய்யப்படும்!





## Editor's Top 10

1. தலைவாங்கிக் குரங்கு
2. மாஸ்கோவில் மாஸ்டர்
3. மரணத்தின் நிழலில்
4. டிராகன் நகரம்
5. லயன் சூப்பர் ஸ்பெஷல்! (தீபாவளி மலர் '87)



6. மனித எரிமலை
7. கோடை மலர் '86
8. மிஸ்டர் ஜெட்
9. ஒரு பனிமலை பயங்கரம்
10. வாரிசு வேட்டை

# புக் - மார்கெட்

## விற்பனைக்கு

1. இராட்சஸக் குள்ளன்
2. காணாமல் போன கடல்
3. சாகஸத் தலைவி
4. நீதிக் காவலன் ஸ்பைடர்
5. டிராகன் நகரம்
6. மாடஸ்டி in இஸ்தான்புல்
7. பயங்கர நகரம்
8. ஸ்பைடர் படை
9. பழிவாங்கும் பாவை

**திகில்**

10. சைத்தான் ஜெனரல்
11. முகமற்ற கண்கள்
12. அப்பல்லோ படம்

*தொடர்பு கொள்க :*

**S. ஜெய்ஷங்கர்,**
L/137, T. N. H. B.
திருவண்ணாமலை - 606 601.

## விற்பனைக்கு

1. யார் அந்த மினி - ஸ்பைடர்?
2. மரண மாஸ்டர்
3. பழி வாங்கும் புயல்
4. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி

## தேவை

1. தலைவாங்கிக் குரங்கு
2. பாட்டில் பூதம்
3. ஆப்பிரிக்க சதி
4. சாகஸத் தலைவி
5. கடத்தல் வலை

***வாங்க - விற்க - தொடர்பு கொள்க :***

**R. ரஞ்சித்,**
171, காந்தி ரோடு,
ஸ்ரீபெருமந்தூர் - 602 105.

## தேவை

1. ஆர்டிக் நரகம்
2. தங்க வேட்டை
3. மிஸ்டர் ஜெட்
4. கொலைப்படை
5. அதிரடிப்படை
6. மர்ம முகமூடி
7. ஆப்பிரிக்க சதி
8. எதிரிக்கு எதிரி

***வாங்கத் தயாராக இருக்கும் வாசகர் :***

**த. துளசி,**
H. G. M. 8, சின்ன பார்க்,
டவுன்குவார்ட்டர்ஸ்,
மேட்டூர் அணை - 1.



# வாசகர் கடிதம்



• ***V. தங்கவேல் பரவை, கோவை - 58.***

லயன் 100வது இதழ் படித்தேன்! டெக்ஸ் வில்லர், மாடஸ்டி, ரிப் கெர்பி கதைகள் வெகு அருமை. மற்ற கதைகள் சுமார்தான் என்றாலும் இதழில் சுவாரஸ்யம் அதிகம் இருந்தது! ரிப் கிர்பி கதைகளை அடிக்கடி வெளியிடவும். அவர் கதைகளில் ஆக்ஷன் குறைவு என்றாலும் சுவாரஸ்யம் அதிகம்!



• ***M. சரவணன், ஈரோடு - 16.***

லக்கி லூக்கின் கதையை ஏன் மிகவும் சிறியதாக வெளியிட்டீர்கள்? இனி ஒவ்வொரு ஆண்டு மலரையும் ரூ. 20/- விலையிலேயே வெளியிடவும்.



• ***L. வெங்கடேஸ்வரன், C. அய்யம்பாளையம்.***

ஸ்பைடர், ஆர்ச்சி, லக்கி லூக், ஜானி போன்றவர்கள் தங்களின் சாகஸங்களுக்கு பக்கங்களின் எண்ணிக்கை ஒரு தடையல்ல என உணர்த்தியிருந்தார்கள்! அதிலும் ஸ்பைடரின் சாகஸம் கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதனை உணர்த்தும் விதம் விறுவிறுப்பாய் இருந்தது.

• ***M. ஆனந்த், சென்னை - 83.***

''லயன் சென்சுவரி ஸ்பெஷல்'' is infinitely Super! ஆனால் ஆர்ச்சி இல்லாதது ஒரு Subtraction! அதே சமயம் அட்டைப் படம், க்ரைம் க்விஸ், ரூ. 1001 போட்டிகள், ஹாட்-லைன், புக் மார்கெட் எல்லாம் ஒரு addition! அல்ல அல்ல- multiplication!

• ***A. ரமேஷ், கூக்கல்துறை***

கதைகளின் தேர்வு வெகு சூப்பர்! ஓவியங்களே கதையைச் சொல்லிய விதம் அட்டகாசம்! ஒரு வேண்டுகோள். லயன் காமிக்ஸிற்கு நிலையான விலை வைத்தால் நன்றாக இருக்கும்!

# தொடரும் நினைவுகள்!



1. மரணக் கோட்டை



2. பாதாளப் போராட்டம்



3. அதிரடி வீரர் ஹெர்குலஸ்



4. கானகத்தில் கண்ணாமூச்சி

## வெற்றி பெறும் வாசகர்கள்

1) **E. R. B. சற்குணர்,**
No. 3, 3rd Cross Street,
கிருஷ்ணா நகர், பம்மல்,
சென்னை - 75.

2) **S. ஜெய்ஷங்கர்,**
L/137, T. N. H. B.,
திருவண்ணாமலை - 606 601.

3) **Miss. சுஜாதா,**
116, சித்திரக்கார தெரு, மதுரை.

## ? ? ? ?

வாசக நண்பர்களே,

இது உங்கள் பகுதி! நீங்கள் சொந்தமாக தயாரித்து அனுப்பும் ஜோக்குகள், கார்டூன்கள், சித்திர சிறுகதைகள் போட்டிகள் போன்றவை (தக்க பரிசுகளுடன்) இங்கே பிரசுரிக்கப்படும்! படைப்புகள் வித்தியாசமாகவும், ஒரிஜினலாகவும் இருக்க வேண்டியது அவசியம்!

இந்தப் பகுதிக்கு பொருத்தமானதொரு பெயர் செலக்ட் செய்து எழுதியனுப்புங்களேன்!

### ஜூலியா

| | |
|---|---|
| லயன் | லயன் 100வது எப்படி? |
| ஜூலியா | சூப்பர்! |
| லயன் | ஜேம்ஸ் பாண்ட்? |
| ஜூலியா | டக்கர்! |
| லயன் | டெக்ஸ் பரவாயில்லையா? |
| ஜூலியா | தூள்! |
| லயன் | அட்டைப்படம் எப்படி? |
| ஜூலியா | அருமை |
| லயன் | (சந்தேகமாக) எப்படித்தான் இவன் 20 ரூபாய் கொடுத்து வாங்கினானோ? |
| ஜூலியா | அதுதான் லயனின் ஸ்பெஷாலிட்டி! |

by K. S. செந்தில் நாதன், 4A, குப்புசாமி தெரு, வேலநத்தம், ஆட்டையாம்பட்டி - 637 501

## என் இனிய லயன் காமிக்ஸே!

[illegible]

டெக்ஸ் வில்லர் என்ற
ஒரு காவிய நாயகனை
நண்பனாக்கினாய்

இரட்டை வேட்டையரை
கொண்டு எங்கள்
உள்ளங்களை வேட்டையாடினாய்

மின்னல் படையினை
கொண்டு உள்ளத்தை
கொள்ளையிட்டாய்

அருமை தமிழில்
பெருமை கொண்ட
காவியம் பல படைத்தாய்
[illegible]
சாதிக்காமல்
[illegible]
[illegible]
காத்திருக்கின்றன.

E. Anand
[illegible]

# போட்டிக்குப் போட்டி!

Dear Sir,

வாசக, - வாசகிகளாகிய எங்களை பல்வேறு போட்டிகளின் மூலம் மகிழ்ச்சிப்படுத்தும் உங்கள் காமிக்ஸ் உலகிற்கு என்னாலான ஒரு எளிய போட்டி!

வரைந்திருக்கும் படங்களில் உள்ளவர்களை அடையாளம் காண முடிகின்றதா?




Created by:
D. Rechel Malini, D/o. Rev. E. S. தேவசகாயம்,
8, சிங்கார தோப்பு, ராம்நாட் - 623 501.

## எடிட்டர் குறிப்பு:

அருமையாக வரையப்பட்டுள்ள இந்தப் பெண்மணிகள் அனைவரும் நமது லயன் & திகில் காமிக்ஸில் வந்துள்ள Characters இவர்களது பெயர்களையும் - முடிந்தால் அவர்கள் தோன்றிய கதைகளின் பெயர்களையும் எழுதி அனுப்புங்கள்!

விடைகள் : அனுப்பக் கடைசி தேதி : 15. 8. '94

# WAIT LIFTER. பளு தூக்கி.



# கதை சொல்லும் படங்கள்!

வாசக நண்பர்களே,

நாடு, நிறம், மொழி, மதம், வயது என்று எவ்விதக் கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காத தொரு அற்புதக் கலைதான் ''காமிக்ஸ்''! உலகமெங்கும் கோடிக்கணக்கானோரை மகிழ் வித்து வரும் காமிக்ஸ் நம் நாட்டில் இன்னும் ஆழமாக வேரூன்றவில்லை! காமிக்ஸ் என்றாலே சிறுபிள்ளை சமாச்சாரம் என்றெதொரு hypocrisy இன்னும் பரவலாக உள்ளது!

காமிக்ஸ்களை உருவாக்குவது என்பது எத்தனை நுணுக்கமான விஷயம் என்பதோ - அதன் பின்னால் எவ்வளவு research; எவ்வளவு efforts உள்ளது என்பதோ பலரும் அறியாத விஷயம்!

எனது இந்தக் கட்டுரைத் தொடர் - பலருக்கும் தெரியாத காமிக்ஸின் மறுபக்கத்தை வெளிச்சம் காட்டுவதற்கே!

- ஆசிரியர்

## காமிக்ஸின் கதை :

காமிக்ஸின் 100 வயது வரலாற்றை வரிசைப்படுத்துவதென்பது இயலாததொரு காரி யம்; காமிக்ஸ் வளர்ச்சியின் முக்கிய மைல்கல்களை மட்டும் தொட்டுப் பார்க்கலாமே!

இன்றைய தினசரிப் பேப்பர்களில் நாம் பார்க்கும் ஒற்றைக் கட்ட கார்டூன்கள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அமெரிக்க செய்தித்தாள்களில் முன்னணி இடம் பிடித்தி ருந்தன. ஆனால் முதன் முறையாக ஒரு கார்டூன் தொடர் - அதாவது வரிசையாகப் படங்களை வரைந்து ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியையோ - கதையையோ சொல்லும் கலை உருவானது 1894ல் தான்!

புரட்சிகரமான இந்த யுக்தி அறிமுகமானதைத் தொடர்ந்து ஏராளமான காமெடி தொடர் கள் தலை தூக்கின! நகைச்சுவை அல்லது மற்ற subjectகளும் காமிக்ஸில் எட்டிப் பார்க்க கிட்டத்தட்ட 30 வருடங்கள் ஆனது!

ஆரம்ப காலத்து காமிக்ஸ்கள் சுமாரான கதையமைப்புடன்; வெகு சுமாரான படங்களு டன் வந்து கொண்டிருந்தன. சீரியஸான செய்தித்தாள்களின் மூலை முடுக்குகளில் மட்டும் காமிக்ஸ்களுக்கு இடம் தரப்பட்டது! இதோ 1905ல் உருவாக்கப்பட்டதொரு காமிக்ஸ்!



காமிக்ஸ் உலகைப் பொருத்தவரை 1929 முக்கியமானதொரு வருஷம்! அமெரிக்கா முழுவதும் கடுமையான பொருளாதார சிக்கலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த போது இரு அற்புதமான காமிக்ஸ் கதைகள் தலையெடுத்தன! ஹால் ஃபாஸ்டர் எனும் ஓவியர் உருவாக்கிய டார்ஜான் தொடரும் - டிக் கால்கின்ஸ் உருவாக்கிய பக் ரோஜர்ஸ் எனும் விண்வெளிக் கதைத் தொடரும் வெளி வந்ததைத் தொடர்ந்து காமிக்ஸின் ''மதிப்பு'' நிறையவே உயர்ந்தது! ஹால் ஃபாஸ்டரின் டார்ஜான் எக்கச்சக்கமான ரசிகர்களை உருவாக்கிய போது - ஃபாஸ்டர் திடீரென சித்திரங்கள் போட்டுத் தர மறுத்து விட்டார்! பர்ன் ஹோகார்த் எனும் ஓவியர் டார்ஜான் தொடரை புதுப்பிக்க - அவரது புதுமையான ஸ்டைல் இன்னும் அதிக வாசகர்களைப் பெற்றது!




காமிக்ஸ் சரித்திரத்தில் அமோக வெற்றி பெற்றதோரு
சித்திரத் தொடர் - டார்ஜன்

1929ல் இன்னுமொரு புதுமை நிகழ்ந்தது! இது நாள் வரை நியூஸ் பேப்பர்களில் மட்டுமே வாசம் செய்து வந்த காமிக்ஸ் தொடர்களுக்கென ஒரு பிரத்யேகமான இதழ் "The funnies" என்ற பெயரில் உதயமானது! துரதிர்ஷ்டவசமாக பதிமூன்றே இதழ்களோடு "The funnies" நின்று போய் விட்டது! ஆனால் காமிக்ஸிற்கென்று தனிப்பட்டதொரு இதழ் என்ற policy அப்போதே பலர் மனதிலும் உருவாகிவிட்டது!

ஈஸ்டர்ன் கலர் பப்ளிஷிங் கம்பெனி என்ற நிறுவனத்தில் நான்கு வருடங்கள் கழித்து ஈஸ்டர்ன் கலர் பப்ளிஷிங் கம்பெனி என்று பெயர்) குறைந்த விலையில் பணிபுரிந்ததொரு ஆசாமி (ஹாரி வில்டென்பெர்க் என்று பெயர்) குறைந்த விலையில் காமிக்ஸ் இதழ் தயாரித்து - அதனை மார்கெட்டில் புதிதாக அறிமுகமாகும் வீட்டு உபயோகப் பொருட்களுடன் இலவசமாகக் கொடுக்கும் யுக்தியை கையாண்டார்! அவ்வப்போது நம் நாட்டிலும் கூட இது செய்யப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு போல்ட் ஸ்பாட் மூடிகளை சேகரித்து அனுப்பினால் வால்ட் டிஸ்னி காமிக்ஸ் இலவசம் என்றொரு திட்டம் சில காலம் முன்பு இருந்தது!

1931ல் ''டிக் டிரேசி'' என்றொரு கரடு முரடான காமிக்ஸ் தொடர் செஸ்டர் கூல்டு எனும் ஓவியரால் துவக்கப்பட்டது! அமெரிக்கா முழுவதும் ரவுடிகளின் ராஜ்யத்தின் கீழ் தவித்துக் கொண்டிருந்த காலம் அது! எதற்கும் கலங்காத போலீஸ் இன்ஸ்பெக்டராக சித்தரிக்கப்பட்ட டிக் டிரேசி மோசமான எதிரிகளை பந்தாடுவது சஸ்பென்ஸோடு சொல்லப்

பட்டது! சஸ்பென்ஸ் தாங்காமல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியான ப்ராங்க்லின் ரூஸ்வெல்ட் ஓவியரைத் தொடர்பு கொண்டு க்ளைமாக்ஸ் எப்படி இருக்கும் என்று கேட்ப துண்டு! (டிக் டிரேசி சமீபத்தில் ஆங்கிலத் திரைப்படமாக வந்து வெற்றிகரமாக ஓடியது உங்களுக்கு நினைவுள்ளதா?)




துப்பறியும் சித்திரத் தொடர்களுக்கு முன்னோடியான டிக் டிரேசி!

1934ல் மேலும் சில ஆக்ஷன் சித்திரக் கதைகள் உருவாகின! அலெக்ஸ் ரேமண்ட் எனும் அசாத்திய திறமைசாலி **ப்ளாஷ் கோர்டன்** எனும் விண்வெளி வீரரை மையமாகக் கொண்டு உருவாக்கிய தொடர் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது! அற்புதமான சித்திரங்களும் - அசாத்திய கற்பனை வளமும் இந்தத் தொடரின் சிறப்பம்சங்கள்!




1936ல் உருவாக்கப்பட்ட கதையிலிருந்து ஒரு பகுதி!

அலெக்ஸ் ரேமண்டுக்குப் பின்னர் வந்த ஆர்ட்டிஸ்டுகள் அத்தனை திறமைசாலிகள் அல்ல என்பதால் தற்சமயம் ப்ளாஸ் கார்டன் கதைகள் மிக சுமாராகவே வருகின்றன! (பார்க்க - ராணி காமிக்ஸ் & குமுதம் தொடர்கதை)

உங்களுக்கு மிகவும் பரிச்சயமான "மந்திரவாதி மாண்ட்ரேக்" பிறந்ததும் 1934ல்! லீ பால்க் எனும் பிரபல கதாசிரியரின் கதையுடன் ஃபில் டேவிஸ் என்ற ஓவியரின் கைவண்ணத்தில் மாண்ட்ரேக் உருவானார்! **அதைப் பற்றி அடுத்த இதழில்....!**

தொடரும்

அக்டோபரில் வருகிறது!

# லயன் தீபாவளி ஸ்பெஷல்!

லயன் காமிக்ஸ்

சூப்பர் சைஸ்!

மெய் சிலிர்க்க

வைக்கும் சித்திரங்கள்!

# இரத்தப் படலம் - V




இன்ஸ்பெக்டர் டேஞ்சரின்
க்ரைம் க்விஸ்!
- 12 -
விருந்தாளிகளில் யாரோ ஒருவர் உங்கள் வைர நெக்லஸை திருட இருப்பதாக எனக்குக் குற்றவுலகிலிருந்து 'கிசு கிசு' கிடைத்துள்ளது!
சுவற்றிலுள்ள இரும்புப் பெட்டியில் நெக்லஸ் பத்திரமாக உள்ளது இன்ஸ்பெக்டர்!
இந்த பெயிண்டிங் அதை மறைத்து வருகின்றது!
வெரிகுட்! இருந்தாலும் திரும்ப ஒரு தடவை சரி பார்த்து விடுவோம்!
அற்புதமான வேலைப்பாடு கொண்ட நெக்லஸ்! எப்படியும் பத்து இலட்சம் பெறுமே!
நானும் விருந்தாளிகளில் ஒருவர் போல நடந்து கொள்கிறேன்! முதலில் ஒரு 'டிரிங்க்' சாப்பிட்டு வருகிறேன்!
எதற்கும் ஒரு முறை இரும்புப் பெட்டியை பார்த்து விடுவது நல்லது - ஹேய்... இந்த ரூமில் என்ன செய்றே மிஸ்டர்?
அது வ...வந்து-
நா...நா...நான் இது லைப்ரரின்னு நினைச்சு நுழைஞ் சிட்டேன்! வெரி சாரி!
இரும்புப் பெட்டியை சோதனை செய்திடலாம்!
ஆண்டவனே!... என் நெக்லஸ் பத்திரமாக இருக்க வேண்டும்!
அப்பாடா - பிழைத்தேன்! பத்திரமாக இருக்கு
நோ! அது போலி!
ஒரிஜினல் உங்க பாக்கெட்டுக்கு எப்படி வந்தது மொட்டை சார்!
க்ர்ர்...
எ...எப்படிக் கண்டு பிடித்தீர்கள் இன்ஸ்பெக்டர்?